21.12.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கால்நடை மருத்துவ முகாம்

வாலாஜாபாத் : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகம் மற்றும் மண்டல கால்நடை துறைசார்பில், நேற்று முன் தினம் இலவச கால்நடை மருத்துவ முகாம் காரை கிராமத்தில் நடந்தது. காரை கிராமம், புளியத்தம்மன் கோவில் அருகே, நேற்று முன் தினம் காலையில் நடந்த முகாமில் 50 மாடுகளுக்கு சினை ஊசி; 806 ஆடு, மாடுகளுக்கு குடற்புழு நீக்கம்; 300 மாடுகளுக்கு தடுப்பூசி; 1,200 கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி; 1,500 வாத்துகளுக்கு பிளேக் நோய் தடுப்பூசிகள் மற்றும் தீவன புல்; தாது உப்பு ஆகியவை வழங்கப்பட்டன. இந்த முகாமில், 325 கால்நடை பயனாளிகள் பயன் அடைந்தனர்.முகாமில், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பேராசிரியர்கள்; கால்நடை மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### உப்பு கருவாடாகும் கெளுத்தி மீன்கள்

பழவேற்காடு : அசைவ பிரியர்கள் விரும்பாத மீன்களை, உப்பு போட்டு பதப்படுத்தப்பட்டு, கருவாடாக மாற்றும் பணியில் மீனவ பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

விரும்பாத ஒன்று:

பழவேற்காடு ஏரி மற்றும் கடலில் மீன் பிடிக்க சென்று வரும் மீனவர்கள் வலையில் குறைந்த அளவிலான மீன்களே கிடைத்து

வருகின்றன.அவற்றில், அய்லா, கெளுத்தி வகைகளே கிடைக்கின்றன. இதில், கெளுத்தி மீன்கள் அசைவ பிரியர்கள் விரும்பாத ஒன்று என்பதால், அவை விற்பனை செய்ய முடிவதில்லை.விலைபோகாத கெளுத்தி மீன்களை, மீனவ பெண்கள், குறைந்த விலைக்கு மொத்தமாக வாங்கி, அவற்றை சுத்தம் செய்து, அதன்மீது உப்பு தடவி சிறு தொட்டிகளில் ஊற வைக்கின்றனர்.மூன்று தினங்களுக்கு பிறகு, உப்பில் ஊறிய கெளுத்தி மீன்களை உலர வைத்து, கருவாடாக மாற்றுகின்றனர். அவை, ஒரு கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனை செய்து வருவாய் ஈட்டுகின்றனர்.

எளிதாக விற்பனை:

கெளுத்தி மீனாக இருக்கும்போது விரும்பாத அசைவ பிரியர்கள், கருவாடாக மாறியதும், விரும்பி வாங்குவதால், எளிதாக விற்பனை செய்ய முடிகிறது என, மீனவ பெண்கள் கூறுகின்றனர்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அருகே, இயற்கை வேளாண்மை குறித்து விவசாயிகளுக்கு, தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் பயிற்சி அளித்தனர். கிருஷ்ணகிரி அடுத்த பெரியகோட்டப்பள்ளியில் வேலூர் ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் முகாமிட்டு, விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்து பயிற்சி அளித்து வருகின்றனர். இதன்படி, பெரியகோட்டப்பள்ளி விவசாயிகளுக்கு பஞ்சகாவியா மற்றும் அமிர்த கரைசல் தயாரித்தல் குறித்து செய்முறை விளக்கம் அளித்தனர். தொடர்ந்து மல்லிநாயனப்பள்ளியில் உள்ள தென்னந்தோப்பில், தென்னை மரம் பராமரித்தல் குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர். அத்துடன் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்தும் பயிற்சி அளித்தனர். பின்னர் மேகலசின்னம்பள்ளி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவிகளை

கொண்டு இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வு பேரணியை நடத்தினர்.

**இலவச காளான் வளர்ப்பு பயிற்சி: 28ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்**

கிருஷ்ணகிரி: கே.ஆர்.பி., அணை பகுதியில் அமைந்துள்ள இந்தியன் வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில், இலவச காளான் வளர்ப்பு மற்றும் இலகு ரக வாகன ஓட்டுனர் பயிற்சியில் சேர விரும்புவோர், வரும், 28 ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். இது குறித்து பயிற்சி நிறுவன இயக்குனர் விஜயகுமார் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணை பகுதியில் அமைந்துள்ள, இந்தியன் வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில், சுய தொழில் துவங்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு, சான்றிதழுடன் கூடிய தொழில் முனைவோர் பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. 18 வயது முதல், 45 வயது வரையுள்ள, தமிழில் எழுத படிக்க தெரிந்த ஆண்கள், பெண்கள் பயிற்சியில் சேரலாம். சுய உதவிக்குழுக்கள், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு பயிற்சியில் சேர முன்னுரிமை வழங்கப்படும். இந்நிறுவனத்தில் தற்போது இலவச காளான் வளர்ப்பு மற்றும் இருசக்கர வாகன பழுது நீக்கம், இலகு ரக வாகன ஓட்டுனர் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள், வரும், 28 ம் தேதிக்குள், 'இயக்குனர், இந்தியன் வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம், டிரைசெம் கட்டடம், கே.ஆர்.பி., டேம், கிருஷ்ணகிரி' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சி முடித்தவர்களுக்கு தொழில் துவங்க வழிகாட்டுதல், திறன் மேம்படுத்தும் பயிற்சி இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல் பயிரிடுவதில் விவசாயிகள் தீவிரம்**

திருத்தணி : வடகிழக்கு பருவ மழையால் ஏரி, குளம் மற்றும் விவசாய கிணறுகளில் நீர் நிரம்பியதால், விவசாயிகள் நெல் பயிரிடுவதில் ஆர்வமாக ஈடுபட்டுள்ளனர். திருத்தணி ஒன்றியத்தில், சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவ மழையால், 50க்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பி அவற்றின் கடைவாசல் வழியாக, உபரிநீர் வெளியேறுகிறது. நந்தி மற்றும் கொற்றலை ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், குளம், குட்டை மற்றும் விவசாய கிணறுகளில் நீர் நிரம்பி உள்ளது. இதையடுத்து, நெல் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து, திருத்தணி வேளாண் துறை உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது:தற்போது நவரை பருவத்தில் குண்டு, ஆடுதுறை 43 மற்றும் 45 ஆகிய நெல் ரகங்கள் நன்றாக விளையும். இதனால், 14 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள், மேற்கண்ட விதை நெல் ரகங்ளை வாங்கி, நாற்று விட்டு, நடவு பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒன்றியத்தில், 1,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில், தற்போது விவசாயிகள் நெற்பயிர் நடவு செய்து வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**குண்டேரிப்பள்ளம் அணையில் மீண்டும் துவங்கியது மீன் பிடிப்பு**

டி.என்.பாளையம்: குண்டேரிப்பள்ளம் அணையில் மீன் பிடிப்பு துவங்கியுள்ளது. இதனால் விற்பனையும், நேற்று ஜோராக நடந்தது. கோபி தாலுகா டி.என்.பாளையம் ஒன்றியம், குன்றி வனத்தையொட்டி குண்டேரிப்பள்ளம் அணை அமைந்துள்ளது. அண்மையில் பெய்த மழையால் அணை நிரம்பியது. இதனால், மீன் பிடிப்பு நிறுத்தப்பட்டது. தொடர் நீர்வரத்தால், ஒரு மாத காலமாக மீன் பிடிப்பு பாதிக்கப்பட்டது. மீனவர்கள் வீடுகளில் முடங்கினர். தற்போது அணையில் இருந்து வெளியேறும் உபரி நீர், அடியோடு குறைந்துள்ளது. மேலும்,

அணைப்பகுதியில் குறைவான காற்றின் வேகம், வெயில், வெளிச்சம் இருப்பதால் மீன்கள் மேல்மட்டத்தில் வந்து துள்ளிக் குதிக்கத் தொடங்கின. இது மீன் பிடிப்புக்கு சாதகமான சூழலாகும். எனவே, மீன் வளத்துறையினர் சனிக்கிழமை முதல் மீன் பிடிக்க அனுமதி தந்தனர். இதை தொடர்ந்து, அன்றிரவே, மீனவர்கள் வலை விரித்தனர். நேற்று காலை வலைகளில் சிக்கிய மீன்களை கரைக்கு எடுத்து வந்தனர். மிர்கால், ரோகு, கட்லா மற்றும் ஜிலேபி ரகம் என மொத்தம், 350 கிலோ மீன் கிடைத்தது. மீன் விற்பனை குறித்து முன்பே அறிவிக்கப் பட்டிருந்தது. இதனால் சத்தி, கோபி, ஈரோடு, திருப்பூர், வாணிப்புத்தூர் பகுதிகளை சேர்ந்த மக்கள், அதிகாலை முதலே டோக்கன் வாங்கி ஆர்வத்துடன் காத்திருந்தனர். தலா, மூன்று கிலோ வீதம் அனைத்து, டோக்கனுக்கும் மீன் வழங்கப்பட்டது. மிர்கால், கட்லா, ரோகு வகை மீன்கள் கிலோ, 130 ரூபாய்க்கும், ஜிலேபி மீன், 90 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. மீன் பிடிப்பு மீண்டும் துவங்கியுள்ளதால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கோபி பாசன பகுதிக்கு 43,500 கிலோ விதை**

ஈரோடு: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியான, கோபி, டி.என்.பாளையம் பகுதியில், தண்ணீர் திறக்கப்பட்டதால், 24 ஆயிரத்து, 504 ஏக்கர் சாகுபடி செய்ய உள்ளனர். இப்பட்டத்துக்கு, கோ-51, ஏ.டி.டி., 45, 39 ஆகிய ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும். இதற்காக, கோபி, டி.என்.பாளையம் வட்டாரங்களில், 18 ஆயிரத்து, 500 டன், தனியார் விற்பனை நிலையங்களில், 25 ஆயிரம் டன் சான்று பெற்ற விதைகள் இருப்பில் உள்ளன. விவசாயிகள், விதை நேர்த்தி செய்து, விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு, மூன்று கிலோ சான்று பெற்ற விதை என்ற அளவில், திருந்திய நெல் சாகுபடி முறையில், மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்து, வரிசை நடவு செய்ய வேண்டும்.

**தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

ஈரோடு: பவானிசாகர் அணையில் இருந்து நேற்று, தடப்பள்ளி - அரக்கன்கோட்டை வாய்க்காலுக்கு உட்பட்ட இரண்டாம் போக பாசனப்பகுதிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது. கொடிவேரி அணையில் இருந்து தண்ணீரை திறந்து வைத்து, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் கூறியதாவது: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில், 24,504 ஏக்கர், காலிங்கராயனில், 15,000 ஏக்கர் என, 40,000 ஏக்கருக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கொடிவேரி அணையில் இருந்து முதற்கட்டமாக, 100 கனஅடி திறக்கப்படுகிறது. படிப்படியாக உயர்த்தி, 700 கனஅடி நீர், ஏப்., 30ம் தேதி வரை, 133 நாட்களுக்கு திறக்கப்படும். இதன் மூலம், கோபி, அந்தியூர் பகுதி பாசன நிலங்கள் பயன்பெறும். இவ்வாறு கூறினார். அதேநேரம், 'தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசனப்பகுதியில், முதல்போக அறுவடை தற்போதுதான் துவங்கி உள்ளது. இந்நிலையில், இரண்டாம் போக சாகுபடி துவங்க தாமதம் ஏற்படும். இச்சூழலில் திறக்கப்படும் தண்ணீர், பாசனத்துக்கு பயன்படாமல் வீணாகும்' என விவசாயிகள் தெரிவித்தனர்.

**நெல் கொள்முதலை அரசு ஏற்க வேண்டும்**

கூடலூார்: 'கூடலூார் பகுதியில், நெல் விவசாயிகள் பயனடையும் வகையில், நெல் கொள்முதலை அரசு ஏற்க வேண்டும்'என, வலியுறுத்தப்பட்டுள்ளது. கூடலூார் பகுதியில், 1200 ஏக்கர் பரப்பில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வந்தது. பணி ஆட்கள் பற்றாக்குறை; மழை குறைவு ஆகிய காரணங்களால், தற்போது, 600 ஏக்கரில் மட்டும் நெல் விவசாயம் நடந்து வருகிறது. விவசாயிகள் கூறுகையில், 'விவசாய இடு பொருள்களின் விலை உயர்வு; வன விலங்குகள் பாதிப்புகளால், எதிர்பார்த்த வருவாய் கிடைக்காமல், நெல் விவசாயத்தில் ஆர்வம் குறைந்து வருகிறது. அரசு தேவையான உதவிகளை செய்து,

ஊக்கப்படுத்தி, அரசே நேரடியாக நெல்லை கொள்முதல் செய்தால், மீண்டும் இப்பகுதியில் நெல் விவசாயத்தின் பரப்பை அதிகரிக்க முடியும்' என்றனர்.

**இயற்கை விவசாய திட்டம்: கிராமங்கள் தேர்வு**

ஊட்டி: 'இயற்கை விவசாய திட்டத்தின் கீழ் கக்குலா, எடக்காடு கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன' என, தெரிவிக்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் சங்கர் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது; 28 கோரிக்கைகள் மீது விவாதங்கள் நடந்தன.

தரமான பால் எது?

கூட்டத்தில், 'ஆவின்' அதிகாரிகள் கூறுகையில்,'பாலுக்கு, அரசு நிர்ணயம் செய்யும் விலைப் பட்டியல் படி தான் விலை கணக்கிடப்படுகிறது. சமீபத்தில், 21 லி., பால் சேகரிக்கப்பட்டு, அதன் தரம் பரிசோதிக்கப்பட்டதில், கொழுப்பு சத்து, 3.4 சதவீதம், பிற சத்து, 7.2 சதவீதம் இருந்தது. 'குறைந்தபட்சம் கொழுப்பு சத்து, 3 சதவீதம், பிற சத்து, 7.7 சதவீதமாக இருந்தால் மட்டுமே, அது தரமான பாலாக கருதப்படும். தரம் குறைந்த பாலிற்கு, விலை வழங்குவதற்கான வாய்ப்பு இல்லை' என்றனர்.

விரைவில் இன்சூரன்ஸ்

கால்நடை துறை அதிகாரிகள் கூறுகையில்,'ஆவின் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை சார்பில், தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையில் இருந்து மானியத் தொகை பெற்று, விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் பாலிசி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சம்மந்தப்பட்ட யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தினரிடம் விளக்கம் கேட்ட போது, பெறப்பட்ட வரையிலான மானியத் தொகைக்குரிய பாலிசி, நடப்பு வாரத்தில் வழங்கப்படும் என தெரிவித்துள்ளனர்' என்றனர்.

இரு கிராமங்கள் தத்து

தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், 'தோட்டக்கலை துறை சார்பில், அவ்வப்போது நடத்தப்படும் விவசாய மேளாவில் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தற்போது, 'பரம்பராகட் கிரிஷ் விகாஸ் யோஜனா' திட்டத்தில், இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கோத்தகிரி கக்குலா, ஊட்டி எடக்காடு கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமங்களில், 50 ஏக்கர் நிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாய பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு இயற்கை விவசாயத்திற்கு தேவையான வேளாண் இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படும்' என்றனர்.

வனத்துறை அதிகாரிகள் கூறுகையில்,'லேண்டனா, பார்த்தீனியம் போன்ற விஷச் செடிகள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருகின்றன,' என்றனர். மின் வாரிய அதிகாரிகள் கூறுகையில்,'இலவச மின் இணைப்புப் பெற தகுதியுள்ள விவசாயிகள் பட்டா நகல், பத்திரங்கள், வி.ஏ.ஓ., தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட உரிமைச் சான்று, கிணற்றை உள்ளடக்கிய வரைபடம், வரி செலுத்தியதற்கான ரசீதை வழங்க வேண்டும்' என்றனர். கூட்டத்தில், விவசாய சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள், தோட்டக்கலை இணை இயக்குனர், பிற துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## புரதச்சத்து மிக்க உலர்தீவனம் நிலக்கடலை செடி

கோவை: உலர் தீவனங்களில், புரதச்சத்துக்கள் நிரம்பிய, நிலக்கடலை செடியை, கால்நடைகளுக்கு கொடுப்பதால், சத்துக்கள் கிடைப்பதோடு, தீவனங்கள் வாங்க செலவாகும் பெருந்தொகையை குறைக்கலாம் என, கால்நடைத்துறை பரிந்துரைத்துள்ளது. கால்நடைகள், உலர் தீவனங்களை விரும்பி சாப்பிடாது. இதில், குறைந்த புரதச்சத்துகள் இருப்பதோடு, எளிதில் செரிப்பதால், பால் உற்பத்தி குறைவதோடு, உடல் வளர்ச்சி தாமதப்படும். இதற்காக, அதிக விலை கொடுத்து, அடர் தீவனங்கள் வாங்க வேண்டியிருக்கும். பாலின் விலை அதிகமாவதற்கு, தீவனச் செலவும் முக்கிய காரணமாக கருதப்படுகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில், உலர் தீவனங்களின் சத்துக்களை தரம் காணும் சோதனை நடத்தப்பட்டது. இதில், மற்ற வகை தீவனங்களை காட்டிலும், கடலைச்செடியில், புரதம் மற்றும் கொழுப்பு சத்துகள் நிரம்பி இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. கால்நடை பல்கலை பேராசிரியர் ஒருவர் கூறுகையில், 'கடலையை பிரித்தெடுத்த பின் சேகரமாகும் செடியை, காலை, மாலை வேளைகளில் உலர்த்தி, ஈரமில்லா இடத்தில் வைப்பது நல்லது. ஏனெனில், ஈரப்பதம் இருப்பின், எளிதில் காளான் நச்சு தொற்று, செரிமான பிரச்னையை ஏற்படுத்தும். இதை, நிலங்களில் பயிரிட்ட விவசாயிகள், தங்களது கால்நடை களுக்கு பிரத்யேகமாக உலர் தீவனங்களை, விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லை. கொட்டில் முறையில் வளர்க்கும் ஆடுகளுக்கு, எவ்வித அடர்தீவனமும் கொடுக்காமல், நிலக்கடலை செடியை கொடுத்தே, ஆரோக்கியமாக வளர்க்க முடியும்," என்றார்.

## வடமதுரையில் விவசாயத்துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம்

வடமதுரை:வடமதுரையில் இடம் கிடைக்காததால் விவசாய துறை அலுவலகம் ஒதுக்குப்புறமான பகுதிக்கு இடம் மாறுகிறது. வடமதுரை

வட்டாரத்திற்கான விவசாய, தோட்டக்கலை அலுவலகங்கள் தற்போது ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற்குள் செயல்படுகின்றன. இங்குள்ள கட்டடங்கள் பழுதாகி மழை நேரத்தில் உட்புறமாக நீர் ஒழுகின்றன. அதோடு, உரம், விதை உள்ளிட்ட பொருட்களை இருப்பு வைப்பதாலும் சிரமம் உள்ளது. இதனால் புதிய கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றிய வளாகத்திற்குள் பயனற்று, பாழடைந்து கிடைக்கும் அலுவலர் குடியிருப்பு பகுதியில் இடம் ஒதுக்கி தர அத்துறையினர் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர். இதனால் அரசு புறம்போக்கு இடம் இருக்கும் இடங்களை தேடியதில், திண்டுக்கல் ரோட்டில் இருந்து செங்குளத்துபட்டி செல்லும் ரோட்டில் இடம் கண்டறியப்பட்டது. இங்கு கட்டடங்கள் கட்ட வடமதுரை பேரூராட்சி நிர்வாகம் ஒப்புதல் தந்தது. இதனையடுத்து இங்கு விவசாய, தோட்டக்கலை, வணிகப்பிரிவு உள்ளிட்ட சில துறைகள் ஒருங்கிணைந்த கட்டடம் அமைக்க முடிவானது. இதற்காக 1.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பணி துவங்கியுள்ளது. ஏற்கனவே நகர் பகுதியில் இடம் கிடைக்காமல் வடமதுரை கால்நடை மருந்தகம் வெள்ளபொம்மன்பட்டியிலும், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றரை கி.மீ., தூரம் தள்ளியும் அமைந்துள்ளது. தற்போது மூன்றாவது அரசு துறை அலுவலகம் நகரைவிட்டு வெளியே தள்ளி அமைகிறது.

**கோமுகி ஆற்றில் மீன் பிடிப்பதில் ஆர்வம்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி கோமுகி ஆற்றில் கிராம இளைஞர்கள் பலரும் மீன் பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த கன மழையால், கோமுகி அணை நிரம்பி ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் கோமுகி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கோமுகி ஆற்றங்கரையோரம் உள்ள கிராம இளைஞர்கள் பலரும், பெருக்கெடுத்து ஓடும் தண்ணீரில் மீன் பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏரிகளில் உபரி நீர் வழிந்தோடும் பகுதியில்

மீன்கள் வெளியேறாத வகையில் வலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் ஏரி நீர் வரத்து கால்வாயில் மீன்கள் வெளியேறுவதற்கு வாய்ப்பு குறைந்துவிட்டது. இதன் காரணமாக ஆறுகளில் அந்தந்த பகுதி மக்கள் மீன் பிடித்து வருகின்றனர். கள்ளக்குறிச்சி அடுத்த ரோடுமாமந்தூர், கா.மாமனந்தல், சோமண்டார்குடி உள்ளிட்ட இடங்களில் கோமுகி ஆற்றில் ஏராளமான இளைஞர்கள், ஆர்வத்துடன் மீன் பிடித்து வருகின்றனர்.

## ரூ.114.19 கோடியில் பயிர் கடன் வழங்கல்

கரூர்: கரூர் கலெக்டர் ஜெயந்தி வெளியிட்ட அறிக்கை: தற்போது, சம்பா பருவ நெல் சாகுபடி பொறுத்தவரை, 12 ஆயிரத்து, 322 ஹெக்டேர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம், 17 ஆயிரத்து, 830 விவசாயிகளுக்கு இதுவரையில், 114.19 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் சிறு, குறு விவசாயிகள், 100 சதவீதம் மானியத்திலும், இதர விவசாயிகள், 75 சதம் மானியத்திலும் நுண்ணீர் பாசனம் அமைத்துப் பயன்பெறவுள்ளனர். வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை உரிய ஆவணங்களுடன் தொடர்பு கொண்டு பயனடையலாம்.

## காளான் வளர்ப்பு பயிற்சி

திருவாடானை: திருவாடானை வேளாண்மை அலுவலர் வீரய்யா கூறியதாவது: தேசிய வேளாண் இயக்கம் சார்பில் திருவாடானை தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிர் சாகுபடி நடக்காத காலங்களில் காளான் சாகுபடி செய்யலாம். இதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. விவசாயத்துடன் இணைந்த கறவை

மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பண்ணை குட்டைகளில் மீன் வளர்த்தல் போன்ற பயிற்சிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்

படும், என்றார். திருவாடானை: திருவாடானை வேளாண்மை அலுவலர் வீரய்யா கூறியதாவது: தேசிய வேளாண் இயக்கம் சார்பில் திருவாடானை தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிர் சாகுபடி நடக்காத காலங்களில் காளான் சாகுபடி செய்யலாம். இதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது. விவசாயத்துடன் இணைந்த கறவை மாடுகள், ஆடுகள் வளர்த்தல், பண்ணை குட்டைகளில் மீன் வளர்த்தல் போன்ற பயிற்சிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்படும், என்றார்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கடலோர மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு**

கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மைய அதிகாரிகள் கூறியது: வடகிழக்கு பருவமழை தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை பரவலாக மழை பெய்துள்ளது. வட தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பதிவாகியுள்ளது. இந்த நிலையில் குமரி கடல், அதனை ஒட்டிய இலங்கைப் பகுதியில் நிலை கொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி, லட்சத்தீவு அதனை ஒட்டியுள்ள மாலத்தீவு பகுதியை நோக்கி நகர்ந்துள்ளது. இதனால், தமிழகம், புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் திங்கள்கிழமை மழை பெய்யக் கூடும். உள்மாவட்டங்களில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவக் கூடும். சென்னையைப் பொருத்தவரை

வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என்றனர். ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை நிலவரம் (மி.மீட்டரில்): திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம்-110, கன்னியாகுமரி- 80, கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், நாகர்கோவில், திருவெல்வேலி மாவட்டம் ஆய்க்குடி, நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம்-50, செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை- 40, சிவகாசி,அம்பாசமுத்திரம்,ராமேசுவரம்-30.

**தமிழக கடலோர மாவட்டங்களில் 2 நாட்களுக்கு மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு**

லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு கடல்பகுதியில் நிலவும் மேலடுக்கு சுழற்சியினால், தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் 2 நாட்களுக்கு மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:– குமரிக்கடல் மற்றும் இலங்கையை ஒட்டியுள்ள கடல்பகுதியில் நேற்று நிலைகொண்டிருந்த மேலடுக்கு சுழற்சி, தற்போது அங்கிருந்து நகர்ந்து லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு கடல்பகுதியில் நிலைகொண்டுள்ளது. இதன் காரணமாக, அடுத்த 24 மணி நேரத்தில் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். தொடர்ந்து 2 நாட்களுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடலோர மாவட்டங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரையில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஆனால் மழை பெய்வதற்கான வாய்ப்பு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: கேரளத்துக்கு உபரி நீர் திறப்பு**

முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், நீர்மட்டத்தை 142 அடியில் நிலை நிறுத்துவதற்காக, ஞாயிற்றுக்கிழமை கேரளத்துக்கு உபரி நீர் திறந்து விடப்பட்டது. உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர், முல்லைப் பெரியாறு அணையில் கடந்த 7-ஆம் தேதி இரண்டாவது முறையாக தண்ணீர் 142 அடியில் நிலை நிறுத்தப்பட்டது. அதன் பின்னர், அணையின் நீர்வரத்து முழுவதும் தொடர்ந்து தமிழகப் பகுதிக்கு திறந்து விடப்படுகிறது. சில நேரங்களில், தமிழகத்துக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவைக் காட்டிலும் கூடுதலாக தண்ணீர் வந்தால் கேரளத்துக்குத் திறந்து விடப்பட்டு, பின்னர் மூடப்படும். இந்த நிலையில், கடந்த 20 நாள்களாகத் தொடர்ந்து 141 அடியிலேயே நீர் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், அணையில் தொடர்ந்து அழுத்தத்தால் ஏற்படும் நீர்கசிவை அளவிட்டு, தமிழக பொதுப் பணித் துறை பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 141.75 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 3,558 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து தமிழகத்துக்கு நொடிக்கு 2,100 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. மேலும், நீர்மட்டத்தை நிலை நிறுத்த அணையில் இருந்து கேரளத்துக்கு 13 மதகுகளில் 4 மதகுகள் வழியாக நொடிக்கு 1,200 கனஅடி உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் மொத்த நீர் இருப்பு 7,598 மில்லியன் கன அடியாக உள்ளது.

**தென்னை மரம் ஏறும் கருவி இலவசமாக வழங்கல்**

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் தென்னை மரம் ஏறும் 6 நாள் பயிற்சி முகாமின் நிறைவு நாளான சனிக்கிழமை, தென்னை மரம் ஏறும்

கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்திய தென்னை வளர்ச்சி வாரியம், திண்டுக்கல் தென்னை உற்பத்தியாளர்கள் நிறுவனம் ஆகியன இணைந்து, இந்த பயிற்சி முகாமை நடத்தின. இந்நிகழ்ச்சிக்கு, திண்டுக்கல் தென்னை உற்பத்தியாளர்கள் நிறுவன தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். இயக்குநர்கள் ஜெயமாணிக்கம், முகமதுஅலி, சீனிவாசன், லிங்கையா, பெருமாள், வேணுகோபால் மற்றும் பள்ளி நிர்வாகி சலீம் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

விழாவில், இப்பயிற்சி பெற்ற விவசாயத் தொழிலாளர்கள் 40 பேருக்கு, இலவசமாக ரூ.4000 மதிப்புள்ள தென்னை மரம் ஏறும் கருவிகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்**

அரியலூர் மாவட்டம்,திருமானூரில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. பருவ மழை காரணமாக கால்நடைகளுக்கு ஏதும் தொற்றுநோய் ஏற்படாவண்ணம் கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் தேவராஜ் பரிந்துரையின் பேரில் இந்தச் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் கஸ்தூரி கருணாகரன் முகாமைத் தொடங்கிவைத்தார். கால்நடைத்துறை உதவி இயக்குநர் பாஸ்கரன் தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் மணிகண்டன், கால்நடை ஆய்வாளர் செல்வமணி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நசீமா, செல்வராஜ், பிச்சைபிள்ளை ஆகியோர் கலந்து கொண்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் பொதுசிகிச்சை, குடற்ப்புழு நீக்கம், தடுப்பூசி உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. முகாமில் 456 வெள்ளாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது

**கொங்கு கல்லூரியில் மூலிகை மருத்துவ முகாம்**

மொரப்பூர் கொங்கு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூலிகை மருத்துவம் குறித்த சிறப்பு முகாம் அண்மையில் நடைபெற்றது. மருத்துவ முகாமை கொங்கு கல்வி அறக்கட்டளையின் தலைவர் சி.முத்து தொடக்கி வைத்தார். மூலிகைச் செடிகள், மூலிகைச் செடிகளின் மருத்துவ குணங்கள், பயன்படுத்தும் முறைகள், மூலிகை மருந்துகள் தயாரிப்பு முறைகள், கட்டுப்படுத்தும் நோய்களின் வகைகள், நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பேராசிரியர் ரங்கராஜன் பேசினார். முகாமில் கொங்கு கல்வி அறக்கட்டளையின் செயலர் ஆர்.பன்னீர்செல்வம், பொருளர் பி.காந்தி, தாளாளர்கள் டி.சொக்கலிங்கம் (மெட்ரிக். பள்ளி), மோகன்ராசு (கல்லூரி), கல்லூரி முதல்வர் கோ.ப.சுதந்திரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சையில் நாளைகறவை மாடு வளர்ப்புப் பயிற்சி**

தஞ்சாவூர் புதிய மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் கறவை மாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை (டிச. 22) நடைபெறவுள்ளது. பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டுவர வேண்டும் எனவும், மேலும் தகவல்களுக்கு 98424 55833, 04362 - 204009 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் எனவும் மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**டிச. 23- ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

பெரம்பலூர் ஆட்சியரகக் கூட்டரங்கில் டிச. 23 ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் டிச. 23 காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில், வேளாண் சம்பந்தமான நீர்பாசனம், கடனுதவிகள், இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரமுகர்கள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்.

**பேச்சிப்பாறை அணையிலிருந்து தொடர்ந்து உபரி நீர் வெளியேற்றம்**

குமரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மழை தணிந்திருந்த நிலையிலும் வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில் பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த சில நாள்களாக கொட்டாரம், மயிலாடி, நாகர்கோவில், கன்னிமார், குளச்சல், ஆனைக்கிடங்கு உள்ளிட்டப் பகுதிகளில் பலத்த மழை இருந்துவந்தது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வறண்ட வானிலை காணப்பட்டது. மழை இல்லாத போதும், பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் உபரியாக திறந்து விடப்பட்டிருந்தது. மேலும் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் பாசன மதகுகள் மூடப்பட்டிருந்தன. அணைகளில் நீர்மட்டம்: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 46.24 அடியாக இருந்தது. அணைக்கு 855 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் மறுகால் மதகுகள் வழியாக

விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75.43 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 404 கன அடி நீர்வரத்து இருந்தது. சிற்றாறு அணையின் நீர்மட்டம் 16.86 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 150 கன அடி தண்ணீர் பாசனக் கால்வாயில் திறந்து விடப்பட்டிருந்தது. சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 17.02 அடியாக இருந்தது. இந்த இரு அணைகளுக்கும் விநாடிக்கு 132 கன அடி நீர்வரத்து இருந்தது. பொய்கை அணையின் நீர்மட்டம் 26.90 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது. மாவட்டத்தில் அணைப் பகுதிகளைவிட இதரப் பகுதிகளில் மழை அதிகளவில் பதிவாகியிருந்தது. அதிகபட்சமாக கொட்டாரத்தில் 117.6 மீ.மீ. மழை பதிவானது. ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை (மீ.மீ.) பேச்சிப்பாறையில் 10.2, பெருஞ்சாணியில் 11.6, சிற்றாறு 1இல் 10, சிற்றாறு 2 இல் 9, பொய்கை 28, மாம்பழத்துறையாறு 33, இரணியல் 34, குளச்சல் 53, குருந்தன்கோடு 49.8, அடையாமடை 26, கோழிப்போர்விளை 11.5, முள்ளங்கனாவிளை 28, புத்தன் அணை 10.2, திற்பரப்பு 11.8, நாகர்கோவில் 52.8, பூதப்பாண்டி 26.1, சுருளகோடு 17, கன்னிமார் 42.5, ஆரல்வாய்மொழி 28, பாலமோர் 8.6, மயிலாடி 54.2, கொட்டாரம் 117.6. திற்பரப்பில் குளிக்கத் தடை: பேச்சிப்பாறை அணையிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டிருந்த நிலையில் திற்பரப்பு அருவியில் குளிக்க ஞாயிற்றுக்கிழமை தடை விதிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து இங்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

**தோவாளையில் ரூ. 3 கோடியில் நவீன மலர் வணிக வளாகம்**

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் ரூ. 3 கோடியில், 75 கடைகளுடன் கூடிய நவீன மலர் வணிக வளாகம் அமைக்க அரசு

உத்தரவிட்டுள்ளது. நாகர்கோவிலை அடுத்த தோவாளையில் மல்லி, பிச்சி, ரோஜா, கோழிக்கொண்டை, சம்பங்கி போன்ற மலர்களை ஏராளமான விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். தோவாளை, சண்முகபுரம், அனந்தபத்மநாபபுரம், கோழிக்கொட்டு பொத்தைவிளை, மருங்கூர், தோப்பூர், ராஜாவூர், ஆதலவிளை, தோவாளைப்புதூர் மற்றும் புளியன்விளை பகுதிகளில் அதிகமாக மலர் சாகுபடி செய்யப்படுகிறது. அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில் மட்டும், ஓராண்டுக்கு 457 ஏக்கர் பரப்பளவில் 1785 மெட்ரிக் டன் மலர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் சாகுபடி செய்யப்படும் மலர்கள் சாலையோரக்கடைகளிலும், தோவாளையிலுள்ள உள்ளூர் சந்தையிலும் இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இப்பகுதியிலுள்ள சந்தைகள் திறந்தவெளியில் செயல்படுவதால் விவசாயிகளும், வணிகர்களும் கோடை, மழை காலங்களில் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர். எனவே, இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி விவசாயிகளுக்கு நியாய விலை கிடைப்பதற்காகவும், வணிகர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காகவும், தோவாளையில் மலர் வணிக வளாகம் அமைக்க வேண்டும் என நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டது. இதையடுத்து, தமிழக அரசு தோவாளையில் 40 கடைகளுடன் நவீன மலர் வணிக வளாகம் அமைக்க ரூ. 1.50 கோடி ஒதுக்கீடு செய்ததது. ஆனால் கூடுதலாக 35 கடைகள் வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனை ஏற்று, 75 கடைகளுடன் ரூ. 3 கோடி மதிப்பில் நவீன மலர் வணிக வளாகம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டது. மாவட்ட வேளாண் விற்பனைக் குழு நிதியில் இருந்து இதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து மாவட்ட அதிமுக செயலர் என்.தளவாய்சுந்தரம் கூறியது; கன்னியாகுமரி மாவட்ட பொதுமக்கள் மற்றும் வணிகர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நவீன வணிக மலர் வணிக வளாகம் அமைக்க

உத்தரவிட்ட தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதன் மூலம் மலர் வணிகர்கள் பயன்பெறுவதோடு விற்பனையும் பன்மடங்கு பெருகும் என்றார் அவர்.

**மானிய விலையில் வேளாண் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம்**

வேளாண்மை துறை மூலம் நெல் நடவு இயந்திரம், தானியங்கள் கதிரடிக்கும் கருவி உள்ளிட்ட வேளாண் கருவிகளை மானிய விலையில் பெறுவதற்கு, விழுப்புரம் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம், 2015-2016ஆம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திர மயமாக்கலுக்கான துணை இயக்கம் சார்பில், விவசாயிகளுக்கு நெல் நடவு இயந்திரம், தானியங்கள் கதிரடிக்கும் கருவிகள், நேரடி விதைப்பு கருவி, மற்றும் இதர வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

இதற்காக ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள், சிறு, குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் பொதுப் பிரிவினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண் கோட்டத்துக்கு உள்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை அலுவலகங் களை அணுகலாம். தொடர்புக்கு: விழுப்புரம், விக்கிரவாண்டி, வானூர் பகுதி விவசாயிகள், உதவி செயற் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, வழுதரெட்டி விழுப்புரம் அலுவலகத்திலும், திண்டிவனம், மரக்காணம், செஞ்சி பகுதி விவசாயிகள் திண்டிவனம் ஜெயபுரம் காலனி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம் பகுதி விவசாயிகள், கள்ளக்குறிச்சி ஏமப்பேர் பள்ளிக்கூட வீதி உதவி

செயற்பொறியாளர் அலுவலகத்திலும், உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர் பகுதி விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் திருக்கோவிலூரிலும் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றுதெரிவித்துள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கால்நடைகளுக்கான மருத்துவ முகாம்**

காஞ்சிபுரம், : தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையம், காஞ்சிபுரம் மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணைந்து நடத்தும் கால்நடைகளுக்கான மருத்துவ முகாம் காரை கிராமத்தில் நடைபெற்றது. முகாமுக்கு உழவர் பயிற்சி மைய தலைவர் வீரமணி தலைமை தாங்கினார். காஞ்சிபுரம் மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் முகாமை தொடங்கி வைத்தார்.இதில் 492 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை, 50 மாடுகளுக்கு இலவச சினை ஊசி, 806 கால்நடைகளுக்கு குடல் புழு நீக்கம், 300 மாடுகளுக்கு தடுப்பூசி, 1200 கோழிகளுக்கு கழிச்சல் நோய் தடுப்பூசி, 1500 வாத்துகளுக்கு தடுப்பூசி உள்பட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

இறவை பருவத்தில் மணிலா பயிரிட மயிலம் பகுதியில் நிலங்கள் தயார்

மயிலம், : மயிலம் வட்டார பகுதிகளில் தற்போது பெய்த பருவமழையை தொடர்ந்து இறவை பருவத்தில் மணிலா பயிரிட விவசாயிகள் தயாராகி வருகின்றனர். கடந்த ஆண்டுகளில் இல்லாததை விட இந்த ஆண்டு மயிலம் வட்டார பகுதிகளில் பருவமழையானது அதிகளவில் பெய்துள்ளது. இதனை தொடர்ந்து மயிலம் வட்டாரத்திற்கு உட்பட்ட இறவை பருவத்தில் 2 ஆயிரம் ஹெக்டேர் மணிலா பயிரிடும் பரப்பை

கொண்டுள்ள மயிலம், பாதிராப்புலியூர், வீடூர், கூட்டேரிப்பட்டு, ரெட்டணை, சித்தணி, சின்னநெற்குணம்,டி.கேணிப்பட்டு, பந்தமங்கலம், புலியனூர், முப்புளி, நல்லாமூர், கொல்லியங்குணம், தழுதாளி, கொணமங்கலம், செண்டூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மணிலா பயிரிட தயார் நிலையில் உள்ளனர். வேளாண் துறை சார்பில் 1400 ஹெக்டேர் மணிலா பயிரிட இலக்கு நிர்ணயித்திருந்தனர். ஆனால் தற்போது பருவமழையானது அதிகளவில் பெய்துள்ளதால் மொத்த மணிலா பரப்பான 2 ஆயிரம் ஹெக்டேரையும் தொட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையொட்டி விவசாயிகள் மயிலம் அடுத்த கூட்டேரிப்பட்டு பகுதியிலிருந்து விதை மணிலாக்களை வாங்கி சென்று ஆர்வமுடன் பயிரிட ஆயத்தமாகி வருகின்றனர். தங்களது விளை நிலங்களை சமன்செய்து பக்குவப்படுத்தும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**உளுந்தூர்பேட்டை பகுதியில் முந்திரி கொட்டையை உடைக்கும் தொழிலாளர்களுக்கு வங்கி கடன்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது தொப்பையாங்குளம் கிராமம். இந்த கிராமத்தில் சுமார் 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் கொண்ட இந்த கிராமம் கடலூர் மாவட்டம் பண்ருட்டியை ஒட்டியுள்ளதால் அந்த பகுதியில் இருந்து முந்திரி பயிர் எடுக்கும் தொழிலில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். 3 கிலோ கொண்டது ஒரு எடை என அவித்த முந்திரி கொட்டைகளை வாங்கி அதனை இயந்திரம் மூலம் உடைத்து கொட்டை மற்றும் முந்திரி பயிரினை தனியாக பிரித்து அதனை சுத்தப்படுத்தி வியாபாரிகளிடம் வழங்கி வருகின்றனர். இதற்காக ஒரு எடை கொண்ட 3 கிலோவிற்கு ரூ 20 மட்டுமே கூலியாக வழங்கப்படுகிறது. இதனை பெற்றுக்கொண்டே இந்த கிராமத்தை சேர்நத பலர் பிழைப்பு நடத்தி வருகின்றனர். இது குறித்து அந்த கிராமத்தை

சேர்ந்த பெண் தொழிலாளர்கள் கூறுகையில், வீட்டில் சும்மா இருக்க கூடாது என்பதால் இந்த வேலையில் எங்கள் கிராமத்தில் ஏராளமான பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். முந்திரி ஏற்றுமதி செய்யும் வியாபாரிகள் மொத்தமாக மூட்டைகளில் கொண்டு வந்து கொடுத்து விட்டு செல்வார்கள். இதை சுத்தம் செய்யப்பட்ட பிறகு அதனை எடை போட்டு வாங்கி செல்வார்கள். குறைந்த கூலி என்றாலும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த வேலையில் தொப்பையாங்குளம் கிராம பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தின் கடைகோடி கிராமமாக தொப்பையாங்குளம் கிராமம் உள்ளதால் எந்த அதிகாரிகளும் எங்களை கண்டு கொள்வது இல்லை. பெண்கள் அதிக அளவு இந்த பணியில் ஈடுபட்டு வருவதால் வங்கிகள் மூலம் கடன் உதவி வழங்கினால் முந்திரிகளை உடைக்கும் இயந்திரம் உள்ளிட்டவைகளை வாங்கி அதிக அளவு கூலி கிடைக்கும் வகையில் ஏதுவாக இருக்கும் என கோரிக்கை வைத்துள்ளனர். எனவே தொப்பையாங்குளம் கிராம பெண்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மானிய கடன் உதவி வழங்கினால் அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு வாய்ப்புகள் உள்ளது. இதற்கான முயற்சியில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த கிராமத்தை சேர்ந்த ஏராளமான பெண்கள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## அதிக லாபம் பெற மண், தண்ணீரை பரிசோதித்து சாகுபடி செய்ய வேண்டும்

ஈரோடு, : அதிக லாபம் பெற மண், தண்ணீரை பரிசோதனை செய்து விவசாயிகள் சாகுபடி செய்ய வேண்டும் என கோபி சரக கூட்டுறவு துணைப்பதிவாளர் பேசினார். ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் மூலம் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர் கல்வி திட்ட முகாம் நடந்தது. இந்த முகாமை தலைமை தாங்கி துவக்கி வைத்த கோபி சரக துணைப்பதிவாளர் அழகிரி பேசியதாவது: இந்த பகுதியில் அதிக அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகள் மண்ணின் தன்மை அறிந்தும், மண், நீர்

பரிசோதனை செய்தும் விவசாயம் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் அதிக அளவு லாபம் கிடைக்கும். மேலும் பயிர்சுழற்சி முறையை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்வது சிறந்தது. இந்த சங்கம் 1926ம்ஆண்டு தொடங்கப்பட்டு 89 ஆண்டுகளாக இப்பகுதி மக்களுக்கு சேவை செய்து வருகிறது. சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்து வருகிறது. மேலும் விவசாய கருவிகள், உயர்தர சாதனங்கள் ஆகியவற்றை வாங்கி சங்க உறுப்பினர்களுக்கு குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். இம்முகாமில் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் தெய்வநாயகம், மேலாண்மை இயக்குநர் ஜெகநாதன், இப்கோ கள மேலாளர் மாரியப்பன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பிரச்சார அலுவலர் வெங்கடராமன் உட்பட விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர். முன்னதாக கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சதாசிவம் வரவேற்றார். முடிவில் உதவி செயலாளர் ஜோதி நன்றி கூறினார். முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இப்கோ மூலமாக நீரில் கரையும் உரங்கள் வழங்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு ஏற்றுமதி காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி**

ஊட்டி, : தோட்டக்கலைத்துறை மூலம் நீலகிரி விவசாயிகளுக்கு ஏற்றுமதி ெசய்யக்கூடிய காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலைத்துறை ஊட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க சீரமைப்புத் திட்டம், வேளாண்மை விரிவாக்க இயக்கம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தோட்டக்கலையில் புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைந்து உற்பத்தியனை இரு மடங்காக அதிகரத்து வருமானத்தை மும்மடங்காக பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உள் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கான

ஏற்றுமதி, காய்கறி பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி ஊட்டியில் உள்ள ரோஜா பூங்கா கூட்ட அரங்கில் நடந்தது. இந்த பயிற்சிக்கு துணை இயக்குநர் ராம்சுந்தர் தலைமை வகித்து, தோட்டக்கலைத்துறையில் நடைமுறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். வேளாண் விற்பனை மற்றும் வணிக வரித்துறையினர் துணை இயக்குநர் வீரமணி, இத்துறையில் உள்ள திட்டங்கள் குறித்தும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் அமைப்பது குறித்தும், வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலையில் சந்தையில் விற்பது குறித்தும் விளக்கினார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் ராஜா, ஏற்றுமதி காய்கறி பயிர்களான செலரி, லெட்யூஸ், ஐஸ்பெர்க் மற்றும் சைசனீஸ் ேகபேஜ் போன்ற பயிர்களின் சாகுபடி முறைகள் குறித்தும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம், மெட்டாரைசியம், சூடோமோனஸ் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து பேசினார். மேலும், விவசாயிகள் அனைவரும் காய்கறி உற்பத்தி செய்து வரும் தனியார் பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு, காய்கறி பயிற்கள் உற்பத்தி செய்வது குறித்த செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், போன்ற காய்கறிகள் விட மாற்று பயிராக ஏற்றுமதிக்கான காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி பயனுள்ளதாக அமைந்தது என பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தெரிவித்தனர். இப்பயிற்சி முகாமில், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரம்யா, உதவி தொழில் நுட்ப மேலாளர் ஜான்பாஸ்கோ, அஸ்வினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டி, : தோட்டக்கலைத்துறை மூலம் நீலகிரி விவசாயிகளுக்கு ஏற்றுமதி ெசய்யக்கூடிய காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தோட்டக்கலைத்துறை ஊட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க

சீரமைப்புத் திட்டம், வேளாண்மை விரிவாக்க இயக்கம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு தோட்டக்கலையில் புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைந்து உற்பத்தியனை இரு மடங்காக அதிகரத்து வருமானத்தை மும்மடங்காக பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு உள் மாவட்ட அளவிலான விவசாயிகளுக்கான ஏற்றுமதி, காய்கறி பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி ஊட்டியில் உள்ள ரோஜா பூங்கா கூட்ட அரங்கில் நடந்தது. இந்த பயிற்சிக்கு துணை இயக்குநர் ராம்சுந்தர் தலைமை வகித்து, தோட்டக்கலைத்துறையில் நடைமுறையில் உள்ள மானிய திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். வேளாண் விற்பனை மற்றும் வணிக வரித்துறையினர் துணை இயக்குநர் வீரமணி, இத்துறையில் உள்ள திட்டங்கள் குறித்தும், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் அமைப்பது குறித்தும், வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலையில் சந்தையில் விற்பது குறித்தும் விளக்கினார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் ராஜா, ஏற்றுமதி காய்கறி பயிர்களான செலரி, லெட்யூஸ், ஐஸ்பெர்க் மற்றும் சைசனீஸ் ேகபேஜ் போன்ற பயிர்களின் சாகுபடி முறைகள் குறித்தும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம், மெட்டாரைசியம், சூடோமோனஸ் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து பேசினார். மேலும், விவசாயிகள் அனைவரும் காய்கறி உற்பத்தி செய்து வரும் தனியார் பண்ணைக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு, காய்கறி பயிற்கள் உற்பத்தி செய்வது குறித்த செயல் விளக்கமும் அளிக்கப்பட்டது. உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், போன்ற காய்கறிகள் விட மாற்று பயிராக ஏற்றுமதிக்கான காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி பயனுள்ளதாக அமைந்தது என பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தெரிவித்தனர். இப்பயிற்சி முகாமில், வட்டார தொழில்நுட்ப மேலாளர்

ரம்யா, உதவி தொழில் நுட்ப மேலாளர் ஜான்பாஸ்கோ, அஸ்வினி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருச்சி, : திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி வட்டாரம் இடங்கிமங்கலம் வருவாய் கிராமம் ராமநாதபுரம் கிராமத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முக மை மூலம் “நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை” பண்ணைபள்ளி நடந்து வருகிறது. 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மணிவண் ணன் கலந்து கொண்டு, ஆங்காங்கே பி.பி.டி 5204 ரக நெற்பயிரில் காணப்படும் பாக்டீாியல் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த பசுஞ்சாண கரைசல் ஏக்கருக்கு 10 கிேலா தெளிக்கலாம், அல்லது 60 கிராம் ஸ்டெப்டோமைசின் 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். குலை நோயைக்கட்டுப்படுத்த சூடோமோனாஸ் புளுரோசன்ஸ் எதிரி உயிரியை ஏக்கருக்கு 400 கிராம் வீதம் 200 லிட்டர் நீர் கலந்து தெளிக்கவும். அதிக பரப்பு இருப்பின் டிரைசைக்ளோசோல் 120 கிராம் மருந்தினை தெளிக்க ஆலோசனை வழங்கினார். மேலும் சிறுகமணி வேளாண் அறிவியல் மையத்தில் மண் அறிவியல் உதவி பேராசிரியை தனுஷ்கொடி, மண்வள மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் என்னும் தலைப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். ராமநாதபுரம் இயற்கை விவசாயி சேகர் மற்றும் சண்முகம் ஆகியோாின் வயல்களை ஆய்வு செய்து, நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறைக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தால் பரிந்துரை செய்யப்படும் நெல் நுண்ணூட்டம் ஏக்கருக்கு 10கிலோ அல்லது வேளாண்மை துறையால் பரிந்துரை செய்யப்படும் ஹெக்டேருக்கு 12.5 கிலோ நெல் நுண்ணூட்டம் இட ஆலோசனைக் கூறினார். வேளாண்மை அலுவலர் சோபனா, வட்டார தொழில் நுட்ப மேலாளர் அன்பழகன், வேளாண்மை உதவி அலுவலர் ராஜராஜன்,

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தமிழ்மணி, பிரின்ஸி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்**

திருமானூர்,: திருமானூரில் வடகிழக்கு பருவமழை காரணமாக கால்நடைகளுக்கு தொற்றுநோய் ஏதும் ஏற்படா வண்ணம் தடுக்கும் நடவடிக்கையாக அரசு வழங்கிய இலவச வெள்ளாடுகளுக்கு கால்நடை பராமரிப்புதுறை மண்டல இணை இயக்குனர் தேவராஜ் பரிந்துரையின் பேரில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் கஸ்தூரி கருணாகரன் முகாமை தொடங்கி வைத்தார். கால்நடைத்துறை உதவி இயக்குனர் பாஸ்கரன் தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் மணிகண்டன், கால்நடை ஆய்வாளர் செல்வமணி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நசீமா, செல்வராஜ், பிச்சைபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் பொதுசிகிச்சை, குடற்புழு நிக்கம், தடுப்பூசி உள்ளிட்ட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. முகாமில் 456 வெள்ளாடுகள் சிகிச்சை பெற்றன.

**அட்மா திட்டம் சார்பில் கிராம விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை பயிற்சி**

அன்னவாசல், : அன்னவாசல் அடுத்த புதூர் கிராமத்தில் அட்மா விரிவாக்கச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு 2 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. அட்மா திட்டம் சார்பில் புதூர் கிராம விவசாயிகளுக்கு நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை செய்வது குறித்த சிறப்பு பயிற்சி முகாம் 2 நாட்கள் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரம்,புதூர் கிராமத்தில் பண்ணை பள்ளியாக நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு அன்னவாசல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் முன்னிலை வகித்தார். முகாமில் விதைச்

சான்றளிப்பு துறை வேளாண் உதவி இயக்குநர் விநாயகமூர்த்தி, குடுமியான்மலை உயிர் உர உற்பத்தி மைய வேளாண் அலுவலர் பத்மபிரியா ஆகியோர் சிறப்புரையாற்றினர். விதைத் தேர்வு, தரமான விதை உற்பத்தி, விதைப் பண்ணை அமைத்தல், அதன் பயன்கள், உயிர் உரங்களைப் பயன்படுத்தும் முறைகள், அதனால் ஏற்படும் பயன்கள் ஆகியன குறித்து விளக்கிக் கூறியதோடு, விவசாயிகளுக்கு இதுதொடர்பாக செயல் விளக்கமும் அளித்தனர். முகாம் ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் ரவிராஜன், வட்டாரத் தொழில்நுட்ப அலுவலர்கள் சக்திவேல், ஆரோக்கியராஜ், ராஜ்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

**நோய் எதிர்ப்பு சக்தி மூலிகை மருந்து தயாரிப்பு பயிற்சி**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் கொரடாச்சேரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நோய் எதிர்ப்புசக்தி மூலிகை மருந்து தயாரிப்பு பயிற்சி நடந்தது. நிலைய தலைவர் பாஸ்கரன் தலைமை வகித்தார். வெள்ள நிவாரணத்துக்கான நோய் எதிர்ப்பு சக்தி மூலிகை மருந்தை செயல்விளக்கத்துடன் செய்து காண்பித்து உணவியல்துறை விஞ்ஞானி கவிதாஸ்ரீ பேசியதாவது: பூண்டு ஒரு சிறந்த கிருமி நாசினியாகும். வியர்வையை பெருக்கும், உடற்சக்தியை அதிகப்படுத்தும். தாய்ப்பாலை விருத்தி செய்யும். சளியை கரைத்து சுவாச தடையை நீக்கும். சீரண சக்தியை அபிவிருத்தி செய்யும். இரத்த கொதிப்பை தணிக்கும். சித்தரின் ஆலோசனைப்படி இந்த மருந்தை தயாரித்து பல்வேறு முகாம்களுக்கு அனுப்பப்படுகிறது என்றார். பள்ளி தலைமை ஆசிரியர் முருகையன், தெய்வேந்திரன், சீனிவாசன், திட்ட உதவியாளர் ரேகா மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

**வெள்ள நிவாரண கால்நடை முகாமில் 150 கிலோ தாது உப்பு கலவை**

நாகை, : நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் காரப்பிடாகை வடக்கில் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வெள்ள நிவாரண சிறப்பு கால்நடை முகாம் நேற்று நடந்தது. கலெக்டர் பழனிச்சாமி தலைமை வகித்தார். முகாமை அமைச்சர் ஜெயபால் துவக்கி வைத்தார். முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை, குடற்புழு நீக்கம், மடி நோய் சிகிச்சை, மலடுநீக்க சிகிச்சை, மூலிகை மருந்து சிகிச்சை, ரத்த பரிசோதனை, சாண பரிசோதனை, கோழிகளுக்கு குருணை தடுப்பூசி, ஆடு, மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. மேலும் கால்நடைகளுக்கு தனுவாசு தாதுஉப்பு கலவை, பசுந்தீவன புல்கரணை வழங்கப்பட்டன. முகாமின் செயல்பாடுகள் குறித்து ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் செல்வக்குமார் விளக்கமளித்தார். முகாமில் பயனாளிகளுக்கு 150 கிலோ தாது உப்புக்கலவை, புல் கரணைகளை அமைச்சர் வழங்கினார். மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் நாகராஜன், கீழையூர் ஒன்றிய தலைவர் மீனா, துணைத்தலைவர் வரதன், ஒன்றியக்குழு உறுப்பினர் அரவிந்தன், கீழையூர் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் பால்ராஜ், திருப்பூண்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி தலைவர் வேதையன், காரப்பிடாகை வடக்கு ஊராட்சி தலைவர் விசுவநாதன் பங்கேற்றனர்.

விவசாயிகளுக்கு மானியத்தில் கருவிகள் வினியோகம்

ராமநாதபுரம், ராமநாதபுரத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மானியத்தில் கருவிகள் வழங்கப்பட்டன. ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் தலைமை வகித்தார். விவசாயிகளிடம் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலைத்

துறை சார்பில் 15 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 18 லட்சத்து 75 ஆயிரம் மானியத்துடன் கூடிய டிராக்டர் இயந்திரங்கள், 2 பயனாளிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய டிராக்டர் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 40,247 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பவானிசாகர் அணையில் இருந்து இன்று தண்ணீர் திறப்பு; ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

தமிழ்நாடு முதல்-அமைச்சர் ஜெயலலிதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:-

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் காளிங்கராயன் வாய்க்கால்களின் பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு இரண்டாம்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடம் இருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பவானிசாகர் அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் காளிங்கராயன் வாய்க்கால்களின் பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு இரண்டாம் போக பாசனத்திற்கு 20-12-2015 (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானி மற்றும் ஈரோடு வட்டத்தில் உள்ள 40,247 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

**நிலவேம்பு கஷாயம் சில உண்மைகள்**



இன்றைக்கு மக்களிடம் சித்த மருத்துவம் பற்றிய விழிப்புணர்வு இருக்கிறதோ இல்லையோ நிலவேம்பு கஷாயம் பற்றி மிக நன்றாக தெரிகிறது.

பல்வேறு வைரஸ் கிருமிகளால் வரும் பன்றிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல், சிக்கன் குனியா, டெங்கு காய்ச்சல் போன்ற நோய்களுக்கும் நிலவேம்பு கஷாயம் ஒரு நிச்சய தீர்வாக இருக்கும் என சித்த மருத்துவர்கள் கருதுகின்றனர். எல்லா வகை காய்ச்சலுக்கும் ஒரே தீர்வா?, இது எத்தனை தூரம் உதவியாக இருக்கும்?. இதை பாராசிடமால் போல் சுரம் வந்த பின் பயன்படுத்த வேண்டுமா?, சுரம் வராமல் தடுக்க உதவுமா?. இதனை தண்ணீருக்கு மாற்றாக பயன் படுத்தலாமா?. எத்தனை நாள் குடிக்க வேண்டும்?. ஒரு முறை குடித்த பின் எத்தனை மாத இடைவெளியில் தற்காப்புக்காக குடிக்க வேண்டும்? என்பது போன்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் இருக்கிறது. இந்த நிலவேம்பு குடிநீரில் அப்படி என்னதான் இருக்கிறது?. முதலில் கஷாயம்–குடிநீர் என்றால் என்ன என்று பார்போம். இன்றைக்கு 'ஹெர்பல்' டீ என்று சொல்கிறார்களே அதை போன்றதே கஷாயம்–குடிநீர். அதாவது சில மூலிகைகளை உலர வைத்து கரகர பொடியாக்கி அதனை கொதிக்கின்ற நீரில் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி குடிப்பது. மருந்தாக பயன்படுத்தும் பொழுது அந்த மூலிகையில் இருக்கும் மருந்து சத்து நீரில் வரும் வகையில் பொடித்து, ஊறவைத்து, கொதிக்கவைத்து, அதே நேரத்தில் அதில் இருக்கும் ஆவியாக கூடிய நறுமண பொருள் தப்பி செல்லாமல் மூடிவைத்து கொதிக்க வைத்து வடிகட்டிகொள்ளுதல்.

நிலவேம்பு கஷாயத்தில் நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம், பேய்புடல், கோரை கிழங்கு, சுக்கு, மிளகு, பற்பாடகம் என்று 9 மூலிகைகள்உண்டு.

ஒவ்வொரு மூலிகைக்கும் சிறப்பான மருந்தியல் செயல் உண்டு. அவற்றின் கூட்டு செயல் சிறப்பானது. அதாவது தனிப்பட்ட

மூலிகைகளின் பயன்பாட்டில் இருக்கும் தன்மையை காட்டிலும், சில மூலிகைகளை சேர்த்து செய்யும் பொழுது மருந்தின் செயல் தன்மை கூடுவதுடன், சில மூலிகைகளில் உள்ள விரும்பத்தகாத பண்பும் சமன் செய்யப்படும், மருந்தின் குறைந்த அளவில் கூட நோய் நீக்கும் தன்மை சிறப்பாக இருக்கும். சுரம் என்பது பொதுவாக வாதம், பித்தம், கபம் என்று சொல்லும் மூன்றில் பித்தம் – வெப்பம் மிகுதியினால் வரும். எனவே அதனை சமன்படுத்தும் மருந்து குளிர்ச்சியை தருவதாகவும் புளிப்பு, உப்பு, காரம் நீக்கிய கசப்பு, இனிப்பு சுவை மிகுந்ததாக இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் வாத மிகுதியால் ஏற்படும் வலியை குறைப்பதாகவும் இருத்தல் வேண்டும். வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம், மிளகு, பற்பாடகம் முதலியவை வெப்பத்தை குறைக்கும் பித்த சமனிகள். கோரைக்கிழங்கு, சுக்கு இரண்டும் வாதத்தின் வெளிப்பாடான வீக்கம் வலியை போக்கும். நிலவேம்பு, பேய்புடல் ஆகியவை பித்தம் மற்றும் கபத்தை சீராக்கும். இவ்வாறு வாதம், பித்தம், கபம் மூன்றையும் சீர்படுத்தும் தன்மையால் நிலவேம்பு கஷாயம் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு மூலிகைக்கும் சிறப்பான மருந்தியல் செயல் உண்டு. அதனை பற்றி தெரிந்து கொள்வோம். நிலவேம்பு 2 அடி வரை வளரும் செடி வகையை சார்ந்தது, இதன் இலை மிளகாய் செடியின் இலையை போன்ற வடிவத்தில் இருக்கும். பாம்பின் நாக்கை போன்ற வடிவில் மலரின் இதழ் இருக்கும். கசப்புகளின் அரசன் என்று வர்ணிக்கப்படும் இந்த செடியின் தண்டு நான்கு பக்கங்களை உடையதாக இருப்பதால் எளிதில் இனம் காணமுடியும்.

வேம்பு என்ற சொல் கசப்பு என்பதை குறிக்கும். எனவே இதனை வேப்ப மரத்துடன் தொடர்புபடுத்தி மரம் என குழம்பக்கூடாது. அண்மைக்கால ஆய்வுகள் நிலவேம்பு பல்வேறு வைரஸ் கிருமிகளை கொல்லும் என்றும், ஈரல் பாதிப்பை தடுக்கும் தன்மையும், குருதி சர்க்கரை இரத்த அழுத்தம் இரண்டையும் குறைக்கும், பசியின்மையை போக்கும் மருந்தியல்

செய்கை உடையது என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சுரத்தை கட்டுப்படுத்தும் செய்கையும் முதன்மையானது. வெட்டிவேர், விலாமிச்சை வேர் இரண்டும் பொதுவாக மணற்பாங்கான இடங்களில் மண் அரிப்பை கட்டுப்படுத்த உதவும், 2 அடி வரை வளரும் தன்மையும் ஆண்டு முழுமையும் வளரும் புல் வகை தாவரங்கள். உடலுக்கு குளிர்ச்சி தருவதற்காக தட்டி, பாய், விசிறி செய்து பயன்படுத்துவதுடன் வெயில் காலத்தில் மண் பானையில் நீரில் வெட்டிவேரை போட்டு வைக்கும் பொழுது அதில் உள்ள நறுமண எண்ணெயின் கிருமி நாசினி தன்மையாலும் குளிர்ச்சி தரும் தன்மையாலும் பயன்படுத்துவது நமக்கு தெரியும். இந்த காரணத்தினாலே சுரம் போக்கும் பித்தத்தை சீர் செய்யும் மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. விலாமிச்சை வேர் என்பது மலையாளத்தில் வெட்டிவேரின் பெயர் என்பதால் ஒரே மூலிகையை இரண்டு முறை சேர்க்கிறார்களோ என்ற சந்தேகம் சிலருக்கு உண்டு. ஆனால் விலாமிச்சை வேரின் தாவரவியல் பெயர் சிசீவிறிளிஙிளிநிணிழி யிகீகிஸிகிழிசிஹிஷிகி.சந்தனமும் குறிப்பாக அதன் வைரம் பாய்ந்த கட்டை மற்றும் வேர் பகுதிகளில் உள்ள நறுமண எண்ணெயின் கிருமி நாசினி தன்மையாலும் குளிர்ச்சி தரும் தன்மையாலும் சுரம் நீக்கும் தன்மை மற்றும் நிலவேம்பு, பேய்புடல் ஆகிய மூலிகைகளின் மிகுந்த கசப்பு தன்மை மருந்து பருகுவதை வெறுக்கும் நிலையை போக்கும். பேய்புடல் வேலி ஓரங்களில் வளரக்கூடிய ஏறு கொடி வகையை சார்ந்தது. குஜராத் போன்ற மாநிலங்களில் இதன் காய் ‘படோலம்’ என்ற பெயரில் சமைத்து சாப்பிடப்படும். இந்த இலை பித்தத்தை சீராக்கும். வீக்கத்தையும் உடல் உறுப்புகளில் ஏற்படும் அழற்சியையும் போக்கும். ரத்தத்தில் இருக்கும் சர்க்கரை அளவை குறைக்கும். சில மருந்து செய்கின்ற நிறுவனங்கள், விலை குறைவு என்ற காரணத்தினால் இதற்கு பதில் பாகற்காய் கொடியை பயன்படுத்துகிறார்கள். சுக்கு ஒவ்வொருவருக்கும் தெரிந்த வீட்டு மருந்து என்றே சொல்லலாம். சுக்கு இல்லாத கஷாயம் இல்லை என்ற பழமொழியும் சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை என்ற சொல்லாடலும் நமக்கு தெரியும்.




வாதத்தை சமன்படுத்தும். வீக்கம் வலியை நீக்கி செரிமானத்தை சீர்படுத்தி, சுரத்தில் வரும் உடல் வலி, தலை வலி ஆகியவற்றை போக்கும்.

மிளகும் நமக்கு நன்றாக தெரியும். சித்த மருத்துவத்தில் பித்த சமனிப்பொருள் என்று விவரிக்கப்படும் நம் தினசரி உணவில் பயன்படுத்தப்படும் பொருள். பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உணவு அருந்தலாம் என்று போற்றப்படுகிறது. இன்றைய ஆய்வில் இதில் உள்ள ஜீவீஜீமீக்ஷீவீஸீமீ என்ற வேதிப்பொருள் கிருமியை கொல்லும் செயலுடன், பிற மருந்துகளை உட்கிரகித்து குறைந்த அளவிலேயே மருந்துகள் நன்றாக செயல்பட செய்யும் தன்மை உடையது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. பற்பாடகம் தரையில் படரும் சிறு செடி நூல் போன்ற மெல்லிய தண்டு உடையது. கிருமி நாசினி செய்கையும், சுரம் அகற்றி செய்கையும் உடையது. ஈரலை பாதிக்கும் பல்வேறு நச்சு பொருட்களில் இருந்து பாதுகாக்கும். கோரை கிழங்கு விவசாயிகளால் பெரிதும் வெறுக்கப்படுகின்ற புல்லானாலும் சித்த மருத்துவத்தில் பெரிதும் பயன்படுகின்ற கிழங்கை உடையது. வீக்கம், வலியை குறைப்பதுடன் நோய் எதிர்ப்பு சக்தியையும் உடையது.

**எப்படிபயன்படுத்துவது?**

வைரஸ் நோயினால் சுரம் தொற்று நோயாக பரவும் காலத்தில் நோய் தடுப்பிற்காக நிலவேம்பு கஷாயத்தை தினசரி இரண்டு வேளை உணவுக்குப்பின் குறைந்தது 5 நாட்களுக்காவது தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

சுரம் வந்த பின் பயன்படுத்துவதாக இருந்தால் புளூ சுரமாக இருந்தால் ஒரு நாளுக்கு 3 வேளை பயன்படுத்த வேண்டும். மருத்துவர் ஆலோசனையுடன் பயன்படுத்துவதே நல்லது. பொதுவாக சிறந்த நிறுவனங்களில் தயாரிக்கப்படும் நிலவேம்பு கஷாய சூரணம், ஒன்றிரண்டாக இடிக்கப்பட்டு பொடியாக எளிதில் நீரில் கொதிக்க வைக்கும் பொழுது கஷாயமாக மாறும் தன்மையில் இருக்கும். 2 கிராம் பொடிக்கு 100 மில்லிலிட்டர் நீர் சேர்த்து மூடி வைத்து நன்றாக கொதித்த பின்னர் வடிகட்டி பருக வேண்டும். ஒரு முறை கொதிக்க வைத்ததை மீண்டும் கொதிக்க வைக்க கூடாது. தயாரித்த மூன்று மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். மூடி வைக்காமல் கொதிக்க வைத்தாலும், அதிகம் கொதிக்க வைத்தாலும் மருந்தில் உள்ள நறுமண வேதியியல் பொருட்கள் மருந்தில் தங்காமல் ஆவியாக வெளியேறும், மருந்தின் செயல்தன்மை குறையும்.

**எல்லா வகை காய்ச்சலுக்கும் ஒரே தீர்வா?**

நிலவேம்பு கஷாயம் எல்லா வகை காய்ச்சலுக்கும் ஒரே தீர்வா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்றே சொல்ல வேண்டும். குடற்சுரம் என்னும் டைபாய்டு காய்ச்சலில் சித்த மருத்துவத்தில் பிற மருந்துகள்உண்டு. நிலவேம்பு கஷாயம் வெறும் வயிற்றில் சாப்பிடும் பொழுது குடல் புண்ணை அதிகப்படுத்தும். வயிற்றில் எரிச்சலை உண்டாக்கலாம். மழைகாலங்களில் வைரஸ் கிருமிகளால் வரும் புளூ, பன்றிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல் முதலிய சுரத்தினால் பலரும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு முறை (8 ஆண்டுகளுக்கு முன்பு ) நானும் வைத்யா உஸ்மான் அலியும் குஜராத்தில் பவநகர் பகுதியில்

உள்ள ஒரு பெரிய மருந்து நிறுவனத்தின் மேலாண் இயக்குனருடன் பேசிக்கொண்டு இருந்தோம். ‘‘எங்கள் மருந்து நிறுவனத்தில் பல ஊழியர்கள் சுரத்தால் பாதிக்கப்பட்டு விடுப்பு எடுத்துள்ளார்கள். எஞ்சிய ஊழியர்கள் சுரத்தால் பாதிக்கப்படாமல் இருக்க சித்த மருந்துண்டா’’ என்று அவர் கேட்டார். உடனடியாக அருகாமையில் இருந்த நாட்டு மருந்துக்கடைக்கு சென்று தேவையான மூலிகை சரக்குகளை வாங்கி அங்கேயே கஷாயம் காய்ச்சி 3 நாட்கள் 300 ஊழியர்களுக்கு பருக கொடுத்தோம். மறு நாளிலிருந்து சுரத்தினால் விடுப்பு எடுப்பது குறைந்தது. பின்னர் மேலும் சில தொழிற்சாலைகளில் வருடம் தோறும் இரு முறை கொடுப்பதை வழக்கமாக்கி இருக்கிறோம். அங்கெல்லாம் சுரம் வரும் காலங்களில் ஊழியர்கள் சுரத்தால் பாதிக்கப்படாமல் உற்பத்தி அதிகமாவதை தொழிற்சாலை மேலாண்மையினர் சொல்வது உண்டு. நோய் தடுக்கவும், தீர்க்கவும் உதவும்.

**இதனை தண்ணீருக்கு மாற்றாக பயன்படுத்தலாமா?**

ஒரு சிலர் ஆறு மாத காலமாக இதனை தண்ணீருக்கு மாற்றாக பயன் படுத்துவதாக பெருமையுடன் சொல்கிறார்கள். இது நிச்சயம் தவறு. அளவுக்கு மிஞ்சினால் குருதி சர்க்கரை குறைவு, ரத்த அழுத்த குறைவு முதலிய எதிர்வினையை ஏற்படுத்தும். இதனால் தலைசுற்றல், மயக்கம் முதலியன ஏற்படலாம். ஊரில் சுரம் பலருக்கும் ஏற்படும் காலத்திலும், பருவகால மாற்றத்தின் பொழுது, குறிப்பாக ஆடி மாதம், ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வைரஸ் சுரம் வராமல் இருக்க மூன்று நாள் காலை, மாலை இருமுறை உணவுக்குப்பின் குடிக்க வேண்டும். ஒருமுறை குடித்த பின் ஆறு மாத இடைவெளியில் தற்காப்புக்காக குடிக்க வேண்டும். நீரை தேற்றான் கொட்டையை இடித்து போட்டு சுத்தம் செய்யலாம், நெல்லிமர கட்டையும் நீர் தொட்டிகளில் போட்டு நீரை சுத்தம் செய்யலாம். இவை இரண்டும் நீரின் கடினத்தன்மையை போக்குவதுடன் நோய் கிருமிகளையும் கொல்லும். சீரகம் சேர்த்து மூடி போட்டு நன்றாக கொதிக்க வைத்து ஆறிய நீரை பருகலாம்.

நிலவேம்பை (கஷாயம்) பற்றிய என்னுடைய கேள்வி தொடர்கிறது. தமிழக வனத்துறை எந்த சித்த ஆயுர்வேத மருந்து செய் நிலையங்களுக்கும் சந்தனம் தராத நிலையில் டாம்ப்கால், இம்ப்காப்ஸ், காந்தி கிராமம் அறக்கட்டளை நடத்தும் எல்.எஸ்.எஸ். நிறுவனம் ஆகியவை மட்டுமே முறைப்படி சந்தனம் பெற உரிமை பெற்று பயன்படுத்துகின்றன. பல நிறுவனங்கள் சந்தனம் சேர்க்காமலேயே நிலவேம்பு குடிநீர் பொடி தயாரிக்கிறார்கள். அதுபோல பேய்புடல் சேர்க்காமல் பாகல் இலையை பயன்படுத்துகிறார்கள். சிலர் நிலவேம்பு செடியின் பொடியை மட்டுமே நிலவேம்பு குடிநீர் என்று விற்கிறார்கள். லேபிலில் எல்லா 9 மூலிகைகளின் பெயர் குறிப்பிடாமல் இருந்தாலும், தயாரிப்பு உரிமை எண் குறிப்பிடாமல் இருந்தாலும் பொதுமக்கள் வாங்க வேண்டாம். போலி மற்றும் தரம் குறைந்த மருந்தால் நோய் தடுப்பும் நோய் குணமும் கிடைக்காது.



**நிலவேம்பு குடிநீர் விலை ஏன் அதிகம்**

நிலவேம்பு குடிநீர் விலை அதிகமாக இருப்பதற்கு காரணம் சந்தனம் திண்மையான மைய கட்டை சேர்ப்பதுதான். சிலர் லாப நோக்குடன் குறைந்த விலையுடைய மென்கட்டையை பயன்படுத்துகிறார்கள். இரண்டிலும் உள்ள வேதியியல் கூறுகள் வெவ்வேறு என்பது ஆய்வு மூலம் புலனாகும். இந்த சூழலில்தான் காலத்திற்கு ஏற்ப சித்த மருந்துகளில் ஏற்படும் மாற்றங்களை பற்றி தொடர் ஆய்வு தேவை என்பது என் போன்றோர் குரல். தமிழக அரசு, இது போன்ற நெருக்கடி நிலையிலாவது சித்த மருத்துவத்திற்கு முன்னுரிமை வழங்குவது நன்றே. வெவ்வேறு சுரத்திற்கும் சித்த மருத்துவத்தில் தனித்தனி நோய் போக்கும் மருந்தும் வழிமுறையும் இருப்பதால் சுய மருத்துவம் ஒரு நாளுக்கு மேல் மேற்கொள்ளாமல் மருத்துவரை ஆலோசித்து நோயின்றி வாழுங்கள்.

**டாக்டர்டி.திருநாராயணன்**

(பாரம்பரிய மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி மைய செயலாளர் சென்னை அரசு சித்த மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் ஓய்வு)

**நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் திப்பிலி உணவுகள்**



**தி**ப்பிலி கொடி வகையை சார்ந்தது. கொடியில் காய்க்கும் காய்தான் திப்பிலி என்றழைக்கப்படுகிறது. செடியின் வேரும் மருத்துவகுணம் வாய்ந்ததாக இருக்கிறது. அவை சிறு முடிச்சுகளுடன் நீண்டு மெலிதாக காணப்படும். அதனை கண்டந்திப்பிலி என்று அழைக்கிறோம். திப்பிலி, காரம் மற்றும் லேசான இனிப்பு சுவையுடையது. உடல் சூட்டை அதிகரிக்க கூடியது. வாதம் மற்றும் கப நோய்களை தீர்க்கும் சக்தி கொண்டது. நுரையீரல் மற்றும் தலையின் சைனஸ் பகுதிகளில் தேங்கிய சளியை அகற்ற உதவுவதால் இதற்கு 'கோழையறுக்கி' என்ற சிறப்பு பெயரும்உண்டு.

திப்பிலி பசியை தூண்டும். இருமல், ஜுரம், தோல் நோய்கள், மூட்டு வலி, மூல தொந்தரவு, கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கங்களை நீக்க உதவுகின்றது. சிறந்த குரல் வளத்தை பெற துணைபுரியும். ரத்த சோகையை நீக்கும். மூளை தாதுகளை பலப்படுத்தும். ஆண்மை சக்தியை அதிகரிக்கச்செய்யும். திப்பிலி மிளகை விட காரமானது. உடலுக்குள் அதி வேகமாக செயல்பட்டு வளர்சிதை மாற்றங்களை மேம்படுத்தும். உடலில் அதிக நேரம் வெப்பத்தை தேக்கி, உடலுக்கு சூட்டை அளித்து, ஊக்கியாக செயல்படும். நிணநீர் நாளங் களையும் சுத்தம்செய்யும். சுக்கு, மிளகு, திப்பிலி சேரும் திரிகடுகு சூரணத்தில் முக்கியமான கூட்டுப் பொருளாக திப்பிலி விளங்குகிறது. திப்பிலியை எந்த மருந்தில் சேர்த்தாலும் அதன் செயல் திறன் அதிகரிக்கும். அதனால் அதனை பல்வேறு முக்கிய சித்த மருந்துகளில் சேர்க்கிறார்கள். குளிர் காலத்தில் உண்டாகும் ஆஸ்துமா, மூக்கடைப்பு, நீரேற்றத்தால் உண்டாகும் தலைவலி மற்றும் மூட்டு வலிகளுக்கு திப்பிலி சிறந்த மருந்தாக திகழ்கிறது. சிறுவர்களுக்கு ஆஸ்துமாவால் உண்டாகும் மூச்சிரைப்பு, ஒவ்வாமை காரணமாக உண்டாகும் தொடர் தும்மலுக்கு 2 கிராம் திப்பிலி பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டு வெதுவெதுப்பான நீர் அருந்தவேண்டும். பெரியவர்கள் 2 கிராம் திப்பிலி பொடியை வெற்றிலையில்வைத்து தேன் கலந்து மென்று சாப்பிடவேண்டும். கல்லீரல், மண்ணீரல் வீக்கம் கொண்டவர்கள் 100 கிராம் திப்பிலியை வறுத்து பொடி செய்து, 100 கிராம் கரிசலாங்கண்ணி கீரை பொடியுடன் கலக்க வேண்டும். அத்துடன் 100 கிராம் பொடித்த நெற்பொரி, 100 கிராம் நாட்டு சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளுங்கள். இதனை காலை, மாலை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டுவரவேண்டும். தொடர்விக்கலையும் இது குணப்படுத்தும். திப்பிலி உஷ்ண தன்மை கொண்டதாக இருப்பதால், பெண்களுக்கு ஆரோக்கியமான சினைமுட்டை உருவாவதற்கு உதவி புரிகிறது. 2 கிராம் திப்பிலி

பொடியை 1/2 தேக்கரண்டி ஆமணக்கு எண்ணெய்யில் கலந்து மாதவிடாய் ஏற்பட்ட இரண்டாம் நாளிலிருந்து ஆறுநாட்கள் சாப்பிட்டால் ஆரோக்கியமான சினைமுட்டை உருவாகும். இதை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வெதுவெதுப்பான நீர் அருந்தவேண்டும். மூட்டு வலிக்கு திப்பிலி பொடி 2 கிராம் எடுத்து 100 மி.லி. பாலில் கலந்து தினமும் பருகவேண்டும். 30 நாட்கள் பருகினால் நல்ல பலன் கிடைக்கும். உடல் வலி, முதுகுவலி மற்றும் வாத நோய்களுக்கு கண்டந்திப்பிலி 5 கிராம் அரைத்து பாலில் கலந்து குடிக்கவேண்டும். திப்பிலி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக்கூடியது. காய கற்ப மூலிகை. ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமை நோய்களுக்கு சிறந்த முதலுதவி மருந்தாக இது செயல்படுகிறது. திப்பிலியில் தயாரிக்கப்படும் 'திப்பிலி ரசாயனம்' என்ற மருந்து ஆஸ்துமா, மூக்கடைப்பு, சைனஸ் தலைவலிக்கு சிறந்தது. 3 கிராம் வீதம் காலையும், மாலையும் சாப்பிட்டு வரவேண்டும்.

திப்பிலியில் தயாராகும் உணவுகள்: **மருந்து டீ**

(இது2பேருக்குபோதுமானது)

திப்பிலி –4எண்ணிக்கை

லவங்கப்பட்டை–3 சிறியதுண்டுகள்

தண்ணீர்–200மி.லி.

செய்முறை:

பாத்திரத்தில் நீரை கொதிக்கவைத்து திப்பிலி, லவங்கப்பட்டையை இட்டு மூன்று நிமிடம் சிறுதீயில் கொதிக்கவையுங்கள். பின்பு வடிகட்டி, தேவைக்கு பனங்கற்கண்டு கலந்து பருகுங்கள். இது பருகுவதற்கு சுவையாக இருக்கும். சளி, இருமல், தொண்டை வலி போன்றவைகளை குணப்படுத்தும். உடல் எடையை குறைக்கவும் உதவும்.

**ஸ்பெஷல் ரசம்**

கண்டந்திப்பிலி–10கிராம்

சீரகம்–1தேக்கரண்டி

துவரம்பருப்பு–1தேக்கரண்டி

காய்ந்தமிளகாய்–2

புளி–சிறியஎலுமிச்சம்பழஅளவு

உப்பு–தேவைக்கு

தாளிக்க:

நெய்–1தேக்கரண்டி

கடுகு–1/2 தேக்கரண்டி

கறிவேப்பிலை–சிறிதளவு

செய்முறை:

வாணலியில் கண்டந்திப்பிலி, சீரகம், துவரம் பருப்பு, காய்ந்த மிளகாய் போன்றவைகளை வறுத்து பொடி செய்து கொள்ளுங்கள். புளியை கரைத்து பாத்திரத்தில் கொட்டி கொதிக்கவிடுங்கள். நன்கு கொதிக்கும்போது அரைத்து வைத்துள்ள பொடியைகொட்டி, லேசாக எரியவிடுங்கள். பின்பு தேவையான பொருட்களை தாளித்து கொட்டுங்கள். கண்டந்திப்பிலி உடல் வலியை போக்கக்கூடியது. சளி, இருமலுக்கு நல்ல மருந்து. பிரசவித்த பெண்கள் இந்த ரசத்தை சூடான சாதத்துடன் கலந்து சாப்பிட வேண்டும். உடல்வலி நீங்கும். நோய் எதிர்ப்புசக்திஅதிகரிக்கும்.

**திரிகடுகபால்**

(இது 2 பேருக்கு போதுமானது) சுக்கு பொடி–1/2 தேக்கரண்டி

மிளகுபொடி–1/2தேக்கரண்டி

திப்பிலிபொடி–1/2தேக்கரண்டி

பனங்கற்கண்டு–தேவைக்கு

பால்–300மி.லி.

தண்ணீர் –100மி.லி.

செய்முறை:

பாலைகாய்ச்சுங்கள்.

நீரில் பொடிகளை இட்டு கொதிக் கவையுங்கள். பின்பு அதனை வடிகட்டி, பாலுடன் கலந்து சுவைக்கேற்ப பனங்கற்கண்டும் சேருங்கள். இதை காலையில் காபி, டீக்கு பதில் அருந்துங்கள். நன்கு பசியெடுக்கும். உடல் வலி தீரும். நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். நாள் முழுவதும் உற்சாகமாக இயங்க, தேவையான சக்தி கிடைக்கும்.



டாக்டர்
இரா. பத்மப்ரியா
(சித்த மருத்துவர்)

**பால்கஞ்சி**

புழுங்கல்அரிசிகுருணை–100கிராம்

பால்–500மி.லி.

திப்பிலிபொடி –1தேக்கரண்டி

செய்முறை:

புழுங்கல் அரிசி குருணையில் நான்கு மடங்கு நீர் கலந்து குக்கரில் வைத்து நன்கு குழைய வேகவையுங்கள். பின்பு அதில் காய்ச்சிய பாலை கொட்டி, திப்பிலி பொடியையும் சேர்க்கவேண்டும். பெரியவர்கள் இதை அப்படியே பருகலாம். குழந்தைகளுக்கு சிறிது சர்க்கரை கலந்து கொடுக்கவேண்டும். கபநோய்களுக்கு சிறந்த உணவு.

**தோட்டக்கலைத்துறை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 40 ஆயிரம் முந்திரி கன்றுகள் மானிய விலையில் விற்பனை**



விருத்தாசலம்,

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள 40 ஆயிரம் முந்திரி கன்றுகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுவதாக அதிகாரி தெரிவித்தார்.

<u>வீரிய ஒட்டு ரக கன்றுகள்</u>

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணையில் முந்திரி, மா, பலா, கொய்யா, மிளகாய், பப்பாளி உள்ளிட்ட பயிர்களின் கன்றுகள்

உற்பத்தி செய்து, அரசு அறிவிக்கும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கன்றுகள் கடலூர் மாவட்டம் மட்டும் இன்றி அருகில் உள்ள வெளிமாவட்ட விவசாயிகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அந்தவகையில் தற்போது முந்திரி வி.ஆர்.ஐ–3 என்ற வீரிய ஒட்டு ரக கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

<u>மானிய விலையில் விற்பனை</u>

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை பண்ணை மேலாளர் கலைச்செல்வன் கூறியதாவது:–

விருத்தாசலம் அரசு தோட்டக்கலைத்துறை பண்ணை மூலம் நடப்பு ஆண்டில் இதுவரை கம்மாபுரம், நல்லூர், மங்களூர், குறிஞ்சிப்பாடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு 80 ஆயிரம் முந்திரி கன்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழும், அரியலூர், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு ஆர்.ஏ.டி.பி, என்.எச்.எம்., ஐ.எச்.எஸ்.டி. என்ற திட்டத்திலும் மானிய விலையில் வி.ஆர்.ஐ–3 ரக முந்திரி கன்றுகள் விற்பனை செய்யப்படுகிறது.

<u>விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம்</u>

தற்போது 40 ஆயிரம் முந்திரி கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு மானிய விலையில் விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. முந்திரி கன்றுகள் தேவைப்படும் விவசாயிகள் நிலம் வைத்திருப்பதற்கான ஆவணங்கள் மற்றும் சிட்டா, அடங்கல் ஆவணங்களுடன் நேரில் வந்து அரசு அறிவித்துள்ள மானிய விலைகளில் முந்திரி கன்றுகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடைகளை இழந்த 12 பேருக்கு நிவாரண தொகை அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.பி.உதயகுமார் வழங்கினர்**




கடலூரில் கால்நடைகளை இழந்த 12 பேருக்கு நிவாரண தொகையை அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.பி.உதயகுமார் வழங்கினர்.
நிவாரணதொகை

கடலூரில் மழை வெள்ளத்தில் சிக்கி கால்நடைகளை இழந்த 12 பேருக்கு நிவாரண தொகை வழங்கும் நிகழ்ச்சி கலெக்டர் முகாம் அலுவலகத்தில் நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். இதில் அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.பி.உதய குமார் ஆகியோர் கலந்து கொண்டு 12 பேருக்கு நிவாரண தொகையை காசோலையாக வழங்கினர். புதிதாக மாடுகள் வாங்க 6 பேருக்கு தலா ரூ.30 ஆயிரமும், கன்றுக்குட்டிகள் வாங்குவதற்கு 5 பேருக்கு தலா ரூ.16 ஆயிரமும், மாட்டு வண்டி வாங்க ஒருவருக்கு ரூ.25 ஆயிரம் என மொத்தம்

ரூ.2லட்சத்து85ஆயிரம்வழங்கப்பட்டது.

மருந்து-மாத்திரைகள்

முன்னதாக மதுரை சமுதாய அறிவியல் கல்லூரி முதல்வர் கண்ணன், துணை முதல்வர் மணிகண்டன் மற்றும் மாணவ-மாணவிகள் கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கொண்டு வந்த மருந்து, மாத்திரைகளை அமைச்சர்கள் எம்.சி.சம்பத், ஆர்.பி.உதயகுமார் ஆகியோரிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து அந்த குழுவினர் ஆடூர்அகரத்தில் இலவசமாக மருந்து, மாத்திரைகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினர். இதில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ரவிச்சந்திரன், கடலூர் நகரசபை தலைவர் குமரன், துணை தலைவர் சேவல்குமார், கவுன்சிலர் பாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசனத்துக்கு கொடிவேரி அணையில் இருந்து தண்ணீர் திறப்பு**



கடத்தூர்,

தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசனத்துக்காக கொடிவேரி அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது.

முதல்–அமைச்சர் உத்தரவு

பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் கொடிவேரி அணையை வந்தடைகிறது. அங்கிருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் தொடங்குகின்றன. தடப்பள்ளி வாய்க்கால் மூலம் 17 ஆயிரத்து 654 ஏக்கர் நிலம், அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலம் 6 ஆயிரத்து 850 ஏக்கர் நிலம் என மொத்தம் 24 ஆயிரத்து 504 ஏக்கர் நிலம் பாசனவசதி பெற்று வருகின்றன.

இந்த நிலையில் பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகளுக்கு 2–ம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதனைத்தொடர்ந்து நேற்று காலை 9 மணிக்கு கொடிவேரி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் பிரபாகரன் தலைமை தாங்கினார். தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் மதகுகளை இயக்கி தண்ணீரைத் திறந்து வைத்தார். அப்போது தண்ணீர் மதகுகளிலிருந்து சீறிப்பாய்ந்து வாய்க்காலுக்கு சென்றது.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் கே.ஏ.செங்கோட்டையன், ரமணீதரன், கோபி தாசில்தார் ஆறுமுகம், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் வெங்கடாசலம், செயற்பொறியாளர் திருச்செந்தில்வேலன், உதவி செயற்பொறியாளர் மோகன்குமார், உதவிப் பொறியாளர் சிங்காரவடிவேல், காசிபாளையம் பேரூராட்சி தலைவர் சந்திரசேகரன், நம்பியூர் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் சுப்பிரமணி, தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் வக்கீல் தளபதி, கரும்பு வளர்ப்போர் சங்கச் செயலாளர் சென்னியப்பன், டி–2 பாசன சங்க தலைவர் கே.எஸ்.மயில்சாமி உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். 133 நாட்களுக்கு தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் 133 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**அந்தியூர் சந்தையில் கொங்கன் இன மாடு ஜோடி ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை**



அந்தியூர்

அந்தியூர் சந்தையில் கொங்கன் இன மாடு ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>மாட்டுச்சந்தை</u>

அந்தியூர் சந்தையில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாட்டுச்சந்தை நடைபெறும். அதன்படி நேற்று அந்தியூரில் மாட்டுச்சந்தை நடந்தது.

இந்த சந்தைக்குஈரோடு, சத்தியமங்கலம், கோபி, அந்தியூர், டி.என்.பாளையம், நாமக்கல், சேலம், மேட்டூர், பண்ணவாடி, கொளத்தூர், எடப்பாடி, பர்கூர், கொங்கனாபுரம், கோவை, மேட்டுப்பாளையம், அன்னூர், திருப்பூர், கர்நாடக மாநிலம் வேளாம்பட்டி, மாதேஸ்வரன் மலை, ராமபுரம், கர்காகண்டி உள்பட பல பகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகள் தங்கள் மாடுகளை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். நேற்று நடந்த சந்தையில் சிந்து இன மாடு ஒன்று ரூ.25

ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரையும், ஜெர்சி இன மாடு ஒன்று ரூ.25 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது.

ரூ.75 ஆயிரம்

கொங்கன் இன பசு மாடு ஜோடி ஒன்று ரூ.50 ஆயிரம் முதல் ரூ.75 ஆயிரம் வரையும், பர்கூர் இன செம்மை நிறமாடு ஒன்று ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரையும் விற்கப்பட்டது. உழவு மாடு ஜோடி ஒன்று ரூ.50 ஆயிரத்தில் இருந்து ரூ.65 ஆயிரம் வரையும் விற்பனை செய்யப்பட்டது. எருமை மாடு ஒன்று ரூ.15 ஆயிரம் முதல் ரூ.55 ஆயிரம் வரையும், கன்றுகுட்டிகள் ரூ.2 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரையும் விற்பனை ஆனது.

ஈரோடு, சேலம், நாமக்கல், கேரளா மற்றும் கர்நாடக மாநிலத்தை சேர்ந்த ஏராளமான வியாபாரிகள் இங்கு வந்து மாடுகளை வாங்கி சென்றனர்.

**சேலம் மூக்கனேரியில் மீன் விற்பனை அமோகம் பொதுமக்கள் வரிசையில் நின்று வாங்கி சென்றனர்**



சேலம்,

சேலம் மூக்கனேரியில் மீன் விற்பனை நேற்று அமோகமாக நடைபெற்றது. மீன்களை பொதுமக்கள் வரிசையில் நின்று வாங்கி சென்றனர்.

மூக்கனேரி

சேலம் கன்னங்குறிச்சியில் சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் மூக்கனேரி உள்ளது. இந்த ஏரிக்கு கடந்த மாதம் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக தண்ணீர் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் ஏரி தற்போது முழு கொள்ளளவை எட்டி கடல் போல் காட்சி அளிக்கிறது. இதைத்தொடர்ந்து ஏரியை குத்தகைக்கு எடுத்திருந்த மீனவர் சங்கத்தினர் மீன் வளர்த்து விற்பனை செய்ய முடிவு செய்தனர்.

இதையடுத்து குத்தகைதாரர்கள், லோகு மீன், கெண்டை, கட்லா, பில்லு கெண்டை, குறவை வகையை சேர்ந்த 3 லட்சம் மீன் குஞ்சுகள் மேட்டூரில் வாங்கி, மூக்கனேரியில் கடந்த மாதம் விட்டனர். இந்த மீன் குஞ்சுகள் தற்போது சுமார் ஒரு கிலோ முதல் 2 கிலோ எடை வரை வளர்ந்துள்ளது.

மீன் விற்பனை அமோகம்

இந்த மீன்களை பரிசலில் சென்று பிடித்து குத்தகைதாரர்கள் விற்பனை செய்ய தொடங்கியுள்ளனர்.கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கிய மீன் விற்பனை தற்போது சூடுபிடித்துள்ளது. வார விடுமுறை தினங்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மீன் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் நேற்று காலை மூக்கனேரியில் மீன்களை வாங்கி செல்வதற்காக பொதுமக்கள் ஏராளமானோர் வந்திருந்தனர். மீன் விற்பனைக்காக அங்கு தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஏரியில் இருந்து பிடித்து வரப்படும் மீன்கள் துண்டு, துண்டுகளாவும், உயிருடனும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை பொதுமக்கள் வரிசையில் நின்று போட்டி போட்டுக் கொண்டு ஆர்வமாக

வாங்கி சென்றனர். ஏரியில் தற்போது கெண்டை, கட்லா, சிலேபி ரக மீன்கள் மட்டுமே அதிகளவில் கிடைக்கிறது. எனவே இந்த வகை மீன்களே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

<u>உடலுக்கு ஆரோக்கியம்</u>

இதுகுறித்து குத்தகைதாரர்கள் கூறுகையில், ஏரியில் விடப்பட்டுள்ள மீன் குஞ்சுகள் வளர்ந்து அதிக எடையுடன் காணப்படுகிறது. அதனை பிடித்து தற்போது விற்பனை செய்து வருகிறோம். வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை சுமார் 100 கிலோ வரை தான் மீன்கள் விற்பனையாகும். சனி, ஞாயிற்று கிழமைகளில் சுமார் ஆயிரம் கிலோ வரை மீன்கள் விற்பனை நடைபெறுகிறது என்றனர்.

இது குறித்து பொதுமக்கள் கூறுகையில், மீன் கடைகளில் குளிர்பதன பெட்டிகளில் வைத்து மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதில் சுவை குறைவாக தான் உள்ளது. ஆனால் மூக்கனேரியில் பிடித்த உடனே மீன்கள் கரைக்கு கொண்டு வந்து வெட்டி கொடுக்கப்படுகிறது. இதனால் இந்த வகை மீன்களில் சுவை அதிகமாக காணப்படுகிறது. இதன் காரணமாக தான் எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை என கருதி வரிசையில் நின்று வாங்கி செல்கிறோம்.

இந்த வகை மீன்களை குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவதாலும் இங்கு வந்து வாங்கி செல்கிறோம். கெண்டை, கட்லா, சிலேபி வகை மீன்கள் ரூ.180 வரை விற்பனை செய்யப்படுகிறது. மேலும் மீன்கள் சாப்பிடுவதால் உடலுக்கு ஆரோக்கியம் என்பதாலும் வாங்கி செல்கிறோம் என்றனர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை: முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



தேனி

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

<u>3 ஆயிரம் கனஅடி தண்ணீர்</u>

தமிழ்நாடு–கேரள மாநில எல்லையில் குமுளி அருகே முல்லைப்பெரியாறு அணை அமைந்து உள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்ட மக்களுக்கும் நீராதாரமாக இருக்கும் இந்த அணையில் 142 அடி உயரத்திற்கு நீரை தேக்கி வைக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு மே மாதம் 7–ந் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியது. இதற்கிடையே அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 மாதமாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இதனால் அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்த நிலையில் கடந்த 7–ந் தேதி இரவு அணையின் நீர்மட்டம் மீண்டும் 142 அடியை எட்டியது.

இதனால் அணையில் இருந்து தமிழகத்திற்கு 2 ஆயிரத்து 100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் சேரும் கூடுதல் தண்ணீர் வல்லக்கடவு வழியாக உபரிநீராக திறந்து விடப்பட்டு வருகிறது. இதன்படி கடந்த 8–ந் தேதி முதல் 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை</u>

பின்னர் அணைக்கு நீர்வரத்து குறைந்த நிலையில் தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவில் மாற்றம் செய்யப்படவில்லை. வல்லக்கடவு வழியாக திறக்கப்பட்ட உபரிநீரின் அளவு குறைக்கப்பட்டது. இந்தநிலையில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால் அணைக்கு நீர்வரத்து 3 ஆயிரத்து 552 கனஅடியாக அதிகரித்தது. இதையடுத்து அணையில் இருந்து ஆயிரத்து 200 கனஅடி உபரிநீர் வல்லக்கடவு வழியாக திறக்கப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு 2 ஆயிரத்து 100 கனஅடி என்பதில் மாற்றம் இல்லை. நேற்று இரவு நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 141.80 அடியாக இருந்தது.

<u>மழை பதிவானது</u>

அணைக்கு கூடுதலாக நீர்வரத்து இருக்கும் நிலையில், வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு அதிகரிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையே நேற்று முன்தினம் தேக்கடி பகுதியில் 20.8 மில்லி மீட்டரும், பெரியாறு பகுதியில் 5.2 மி.மீ., கூடலூரில் 10 மி.மீ., உத்தமபாளையம் 2.6 மி.மீ. மழை பதிவானது.

இதற்கிடையே நேற்று சுருளி அருவியில் நீர்வரத்து அதிகரித்ததால், முல்லைப்பெரியாற்றில் வரும் தண்ணீரின் அளவும் அதிகரித்தது. இதனால் உத்தமபாளையம் பகுதியில் முல்லைப்பெரியாற்றில் குளிக்க

சென்றவர்களை கரைப்பகுதிகளில் பாதுகாப்பாக குளிக்கும்படி வருவாய்த்துறையினர் மற்றும் போலீசார் அறிவுறுத்தினர்.

**ஆண்டிப்பட்டியில், வரத்து குறைவு: ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,300–க்கு விற்பனை**



ஆண்டிப்பட்டி

வரத்து குறைவு காரணமாக ஆண்டிப்பட்டியில் ஒரு கிலோ மல்லிகைப்பூ நேற்று ரூ.1,300–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பனிப்பொழிவு

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள கதிர்நரசிங்கபுரம், கன்னியப்பபிள்ளைபட்டி, கோத்தலூத்து, சித்தார்பட்டி, பாலக்கோம்பை, தொப்பம்பட்டி, திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், ஏத்தகோவில், சுந்தர்ராஜபுரம் ஆகிய பகுதியில்

மல்லிகை, செவ்வந்தி உள்ளிட்ட பூக்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு விளையும் பூக்கள் ஆண்டிப்பட்டி பூ மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழை மற்றும் பனிப்பொழிவு காரணமாக பூக்கள் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் பூமார்க்கெட்டிற்கு அவற்றின் வரத்து குறைந்துள்ளதால் கடந்த சில வாரங்களாக விலை உயர்ந்து கொண்டே வருகிறது.

தேவை அதிகரித்துள்ளது

குறிப்பாக மல்லிகை பூக்களின் விலை கடந்த சில வாரங்களாக ஒரு கிலோ ரூ.1000–க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் மல்லிகைப்பூக்களை வாங்க முடியாமல் பொதுமக்கள் அவதி அடைந்து வருகின்றனர். இந்தநிலையில் நேற்று ஆண்டிப்பட்டி பூ மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ அதிகபட்சமாக ரூ.1,300–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதனால் விலை குறையும் என்று எதிபார்த்த பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தற்போது மார்கழி மாதம் என்பதால் தினந்தோறும் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகிறது. இதனால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது.

மேலும் கோவில்களுக்கு செல்லும் பெண்கள், தங்கள் கூந்தலில் மல்லிகை உள்பட ஏதேனும் பூக்களுடன் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். மல்லிகைப்பூக்களின் விலை உயர்ந்துள்ளதால், அவற்றை கட்டி சில்லறையில் விற்பனை செய்வோரும் கூடுதல் விலையை கூறுகின்றனர். இதனால் பெண்கள் வேதனை அடைந்து வருகின்றனர்.

மேலும் குறையும்

ஆண்டிப்பட்டி பகுதியில் கடந்த நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்துள்ள நிலையில், பூக்களின் வரத்து மேலும் குறையும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இதனால் பூக்களின் விலை குறைவதற்கு வாய்ப்பு

ஏற்படாது என்று வியாபாரிகள் கூறினர். இதன்படி ஆண்டிப்பட்டி மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி பூக்களின் ஒரு கிலோ விற்பனை விலை பின்வருமாறு:–

மல்லிகை–ரூ.1,300, பிச்சி–ரூ.400, முல்லை–ரூ.600, கனகாம்பரம்–ரூ.1,500, செவ்வந்தி–ரூ.180, அரளி–ரூ.200, சம்பங்கி–ரூ.150, ரோஜா–ரூ.80, செண்டு மல்லி–ரூ.50, கோழிக்கொண்டை–ரூ.70, துளசி–ரூ.20.